திசைகள்

THISAIGAL

PP19723/10/2022(035349)

வாய்மையின் வழிகாட்டி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ ஆண்டு கார்த்திகை மாதம் ஹிஜிரி 1447 முஹர்ரம்

Weekly Edition 22 November -28 November 2026 - RM 3.00



தாயகம் திரும்பிய அகதிகள்:

எதிர்காலத்தைத் தொலைத்த சோகம் உள்ளே!



மலாக்கா தேர்தல்: ஜனநாயகமா? மதவாதமா?

தேர்தல் வெற்றி என்பது ஜனநாயகத்தின் வெற்றியா? அல்லது இன, மத அடையாள அரசியலுக்கு மக்கள் வழங்கிய ஆதரவா? மலாக்கா தேர்தல் முடிவுகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் அரசியல் சமிக்ஞைகள் என்ன? மலேசியாவின் பல்லின ஜனநாயகம் எந்தத் திசையை நோக்கிப் பயணிக்கிறது? நாட்டின் பல்லின அரசியலுக்கு காத்திருக்கும் புதிய சவால்! வெற்றிக்குப் பின்னால் இருக்கும் அரசியல் யதார்த்தத்தை அலசும்

சிறப்பு செய்தி உள்ளே....



மருத்துவ அறிவியலுக்கே சவால் விட்ட சாதனை!

துண்டிக்கப்பட்ட மணிக்கட்டை மீண்டும் இணைத்தவர்!

நுண் அறுவைச் சிகிச்சையில் வியக்கத்தக்க வெற்றியைப் பதிவு செய்தவர் டாக்டர் அலன் ரவி ராஜகோபால்! யார் இந்த மருத்துவ நிபுணர்? அவரது பின்னணி என்ன? மருத்துவத்துறையில் அவர் படைத்த சாதனைகள் யாவை? ஓர் அலசல்...

உள்ளே!

அமைச்சர் பதவி விலகல்

அரசியல் தந்திரமா?

அந்தோணி லோக்கின் பதவி விலகல் வெறும் அரசியல் எதிர்ப்பின் வெளிப்பாடா? அல்லது ஜசெக.வின் எதிர்காலத்தை வலுப்படுத்துவதற்காக அவர் மேற்கொண்டுள்ள திட்டமிட்ட அரசியல் நகர்வா?



விரிவான செய்தி உள்ளே....

2027-ல் என்னென்ன அதிசயங்கள் காத்திருக்கின்றன?

பாபா வங்காவின் மர்மக் கணிப்புகள்



புதிய ஆண்டு எப்படி இருக்கும்? என்னென்ன மாற்றங்கள் நிகழும்? தனது ஞானக் கண்ணால் முன்கூட்டியே கணித்ததாகக் கூறப்படும் பாபா வங்காவின் ஆச்சரியமூட்டும் கணிப்புகள் என்ன? சில மனிதர்களுக்குக் கிடைக்கப்போவதாகச் சொல்லப்படும் அதிசய ஆற்றல்கள் என்ன? எதிர்பார்ப்புகளையும் வியப்பையும் ஏற்படுத்தும் 2027 குறித்த கணிப்புகள்... ஓர் அலசல்...

உள்ளே!

தலையங்கம்

ஹிண்ட்ராப் எழுச்சி தந்த அரசியல் வெளிச்சம்

2007 நவம்பர் 25ஆம் தேதி! ஒரு ஞாயிற்றுக்கிழமை! மலேசிய இந்தியர்களின் அரசியல் வரலாற்றில் அழுத்தமாகப் பதிந்துவிட்ட அந்த நாளை நினைத்துப் பார்க்கும்போது, 19 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் அதன் தாக்கம் மனக்கண்முன் நிழலாடுகிறது.

அன்றைய தினம் தமிழ் நேசன் நாளிதழின் ஞாயிற்றுக்கிழமை ஷிப்ட் ஆசிரியராக பணியாற்றிய அனுபவம் எனக்கு இன்றும் மறக்க முடியாதது. இரவு எட்டு மணிக்குள் நாளிதழை முடித்துவிட வேண்டும் என்ற பணிச்சுமை; இடையிடையே வந்து கொண்டிருந்த நிர்வாகத்தின் பல்வேறு உத்தரவுகள்; மறுநாள் குடும்பத்தினருடன் இந்தியாவின் சிம்லாவுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டிய சூழல் எனப் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் அன்றைய பணிகள் நகர்ந்து கொண்டிருந்தன.

ஆனால், கோலாலம்பூரின் மையப்பகுதியில் அப்போது உருவாகிக் கொண்டிருந்த வரலாற்று எழுச்சி, மலேசிய அரசியலின் போக்கையே மாற்றுவதற்கான அறிகுறியாக அமைந்திருந்தது.பிற்பகல் இரண்டு மணியளவில் கோலாலம்பூரின் பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரங்களுக்கு அருகே இந்தியர்களின் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

இந்தியர்களின் உரிமைகளுக்காகக் குரலெழுப்பிய ஹிண்ட்ராப் அமைப்பின் அழைப்பை ஏற்று ஆயிரக்கணக்கானோர் அங்கு திரண்டனர். போராட்டத்திற்கு முந்தைய நாள், அப்போது கோலாலம்பூர் போலீஸ் தலைவராக இருந்த டத்தோ ஸுல் ஹஸ்னான் நஜீப் பஹாருடின் வெளியிட்டதாக நினைவுகூரப்படும் தகவலில், 500 பேருக்கும் குறைவானவர்களே கூடுவார்கள் என்ற எதிர்பார்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அந்தக் கணிப்பைத் தவிடுபொடியாக்கி ஆயிரக்கணக்கான இந்தியர்கள் ஒன்றுகூடினர். எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருந்தாலும், உரிமைக்கான உணர்விலும் ஒன்றுபட்ட எழுச்சியிலும் தாங்கள் வலிமையானவர்கள் என்பதை அந்த மக்கள் உலகிற்கு உணர்த்தினர். அந்த நாளில் வெளிப்பட்டது வெறும் மக்கள் கூட்டமல்ல; நீண்டகாலமாகத் தங்களுக்குள் தேங்கியிருந்த ஆதங்கங்களின் வெளிப்பாடு!

அந்தப் பேரணி ஒரு சாதாரண அரசியல் ஒன்றுகூடலாக இருக்கவில்லை. மலேசிய இந்தியர்களின் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகள் குறித்த கவலைகளை அனைத்துலகத்தின் கவனத்திற்குக் கொண்டுசெல்லும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட வரலாற்று நிகழ்வாக அது அமைந்தது. பிரிட்டிஷ் உயர் ஆணையத்திடம் மனு ஒன்றைச் சமர்ப்பித்து, மலேசிய இந்தியர்களின் பிரச்சினைகளை உலக அரங்கில் முன்வைக்க வேண்டும் என்பதும் அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

மகாத்மா காந்தியின் உருவப்படங்களை ஏந்தியவர்களும், தங்களது அடிப்படை உரிமைகளுக்காக அமைதியாகக் குரல்கொடுத்தவர்களும் அந்தப் பேரணியில் இடம்பெற்றனர். ஆனால், அமைதியான முறையில் தங்களது கோரிக்கைகளை முன்வைக்கத் திரண்ட மக்களை எதிர்கொள்ள போலீஸ் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின. கண்ணீர்ப்புகைக் குண்டுகள், தண்ணீர்ப் பீரங்கிகள், தடியடிப் பிரயோகங்கள் எனக் கையாளப்பட்ட நடவடிக்கைகள் மலேசிய இந்தியர்களின் மனங்களில் ஆழமான காயத்தை ஏற்படுத்தின.

இந்தச் சம்பவம் மலேசியாவின் எல்லைகளைக் கடந்து அனைத்துலக அளவிலும் கவனத்தைப் பெற்றது. போராட்டத்தில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டனர். முக்கிய சமூக ஆர்வலர்கள் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர். மேலும், போராட்டத்தில் கலந்துகொண்ட பலர் போலீஸ் துறையின் பணிக்கு இடையூறு விளைவித்ததாகக் கூறி நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

அமைதியான ஒன்றுகூடல், கருத்துச் சுதந்திரம், மனித உரிமைகள் ஆகிய அடிப்படை ஜனநாயக உரிமைகள் குறித்த விவாதங்கள் தீவிரமடைந்தன. மலேசிய வழக்கறிஞர் மன்றத்தின் கண்காணிப்புக் குழுவும் அன்றைய நிகழ்வுகள் குறித்து தனது கவலைகளைப் பதிவு செய்தது. ஒரு நாட்டின் குடிமக்கள் தங்களது உரிமைகளுக்காகக் குரலெழுப்பும்போது, அவர்களின் குரல் உரிய முறையில் செவிமடுக்கப்பட வேண்டுமே தவிர, அச்சத்தின் மூலம் அடக்கப்படக் கூடாது என்ற ஜனநாயகக் கேள்வி அப்போது வலுவாக எழுந்தது.

இந்திய வம்சாவளியினர் வாழும் வெளிநாடுகளிலும் இந்த நிகழ்வு கவலையை ஏற்படுத்தியது. நான் குடும்பத்தினருடன் சிம்லாவில் இருந்தபோது வாங்கிப் படித்த The Indian Express நாளிதழில் இடம்பெற்ற ஒரு செய்தி இன்றும் என் நினைவில் ஆழமாகப் பதிந்துள்ளது. அப்போது மொரீஷியஸ் பிரதமராக இருந்த டாக்டர் நவீன்சந்திர ராம்கூலம், மலேசிய இந்தியர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து கடுமையான கவலையை வெளிப்படுத்தியிருந்தார்.

மலேசியாவில் வாழும் இந்தியர்களின் அடிப்படை உரிமைகளும் பாதுகாப்பும் தொடர்ந்து பாதிக்கப்படுமானால், அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் மற்றும் காமன்வெல்த் போன்ற உலகளாவிய அரங்குகளில் அவர்களுக்காகக் குரல்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற கருத்து அந்தச் செய்தியில் இடம்பெற்றிருந்ததாக இன்றும் நினைவுகூர்கிறேன். அந்த நாளிதழின் கட்டிங் இன்று என்னிடம் இல்லாவிட்டாலும், அந்தச் செய்தியை வாசித்தபோது ஏற்பட்ட உணர்வு மட்டும் மறையவில்லை. மலேசிய இந்தியர்களின் உரிமைப் பிரச்சினை இனி உள்நாட்டு விவகாரமாக மட்டும் பார்க்கப்பட முடியாது என்பதை அந்த அனைத்துலக எதிர்வினை உணர்த்தியது.

ஹிண்ட்ராப் பேரணிக்குப் பின்னர் மலேசிய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களைத் தனித்தனியாகப் பார்க்க முடியாது. 2008 மார்ச் 8ஆம் தேதி நடைபெற்ற 12ஆவது பொதுத் தேர்தலில் பாரிசான் நேஷனல் கூட்டணி பெரும் பின்னடைவைச் சந்தித்தது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை இழந்ததுடன், பினாங்கு, சிலாங்கூர்,பேரா உள்ளிட்ட மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றின.

பினாங்கில் ஜசெக, பிகேஆர், பாஸ் ஆகிய கட்சிகள் இணைந்த பக்காத்தான் ராக்யாட் கூட்டணி 40 சட்டமன்றத் தொகுதிகளில் 29 இடங்களை வென்றது. ஜசெக மட்டும் 19 இடங்களைக் கைப்பற்றியது. பல ஆண்டுகளாக கெராக்கான் தலைமையில் பாரிசான் நேஷனல் கூட்டணியின் ஆதிக்கத்தில் இருந்த பினாங்கு அரசியலில் புதிய அத்தியாயம் தொடங்கியது.

இந்தத் தேர்தல் முடிவுக்கு ஹிண்ட்ராப் பேரணி மட்டுமே காரணம் என்று கூற முடியாது. எனினும், இந்திய வாக்காளர்களிடையே உருவான அரசியல் விழிப்புணர்வையும் மாற்றத்திற்கான மனநிலையையும் அந்தப் பேரணி வலுப்படுத்திய முக்கிய நிகழ்வாக அமைந்தது என்பதை மறுக்க முடியாது.

பினாங்கில் புதிய ஆட்சி அமைந்ததைத் தொடர்ந்து இந்தியச் சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவத்திலும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றம் ஏற்பட்டது. பிறை சட்டமன்றத் தொகுதியிலும் பத்து காவான் நாடாளுமன்றத் தொகுதியிலும் வெற்றிபெற்ற டாக்டர் பி. ராமசாமி, பினாங்கின் துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் அந்த உயரிய பொறுப்பை ஏற்றது சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் புதிய அடையாளத்தை உருவாக்கியது. அதே பொதுத் தேர்தலில் சிலாங்கூரிலும் பக்காத்தான் ராக்யாட் ஆட்சி அமைந்தது. மறுபுறம், பாரிசான் நேஷனலின் பல முக்கியத் தலைவர்கள் தோல்வியைச் சந்தித்தனர். அவர்களில் ம.இ.கா.வின் நீண்டகாலத் தலைவராக இருந்த டத்தோஸ்ரீ சாமிவேலுவும் ஒருவர். சுங்கை சிப்புட் நாடாளுமன்றத் தொகுதியில் அவர் தோல்வியடைந்தது, இந்திய வாக்காளர்களின் அரசியல் எதிர்பார்ப்புகளில் ஏற்பட்ட மாற்றத்தை வெளிப்படுத்திய முக்கிய நிகழ்வாக அமைந்தது.

1969ஆம் ஆண்டு மே 13 சம்பவத்திற்குப் பின்னர் உருவான அரசியல் மறுசீரமைப்பின் தொடர்ச்சியாக 1974ஆம் ஆண்டில் பாரிசான் நேஷனல் கூட்டணி அறிமுகப்படுத்தப்பட்டது. பல தசாப்தங்களாக நாட்டின் அரசியலில் ஆதிக்கம் செலுத்திய அந்தக் கூட்டணி, 2008ஆம் ஆண்டு கடுமையான பின்னடைவைச் சந்தித்தபோதிலும், மத்திய அரசாங்கத்தை இழந்தது 2018ஆம் ஆண்டில்தான்.

14ஆவது பொதுத் தேர்தலில் பக்காத்தான் ஹராப்பான் வெற்றி பெற்று மத்திய அரசாங்கத்தை அமைத்தது. 2003 இல் இருந்து பிரதமராக இருந்த துன் அப்துல்லா அகமது படாவி 2009ஆம் ஆண்டிலேயே பதவி விலகியிருந்தார். இந்த அரசியல் வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் வாக்காளர்களின் தீர்ப்பு முக்கியப் பங்கு வகித்தது. குறிப்பாக, இந்திய வாக்காளர்கள் தங்களது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் ஆற்றல் கொண்டவர்கள் என்பதையும், அவர்களின் ஆதரவு எந்தக் கட்சிக்கும் நிரந்தரமாகச் சொந்தமானதல்ல என்பதையும் அரசியல் கட்சிகள் உணர வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தப் பின்னணியில் ஹிண்ட்ராப் பேரணி மலேசிய இந்தியர்களுக்கு உணர்த்திய மிக முக்கியமான பாடம் ஒன்றே ஒன்றுதான்: மக்கள் தொகையில் குறைவாக இருப்பது அரசியல் வலிமையில் குறைவாக இருப்பதற்குச் சமமல்ல! ஜனநாயகத்தில் ஒவ்வொரு வாக்குக்கும் மதிப்பு உண்டு. தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கக்கூடிய வாக்காளர்களாக இந்தியர்கள் இருக்கிறார்கள் என்பதை அரசியல் கட்சிகள் உணர்ந்துகொள்ள வேண்டிய கட்டாயத்தை அந்த எழுச்சி ஏற்படுத்தியது.

ஆனால், வாக்குவலிமையை உணர்த்துவதோடு நமது கடமை முடிந்துவிடக் கூடாது. கல்வியில் சமவாய்ப்பு, வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், வீடமைப்பு, குடியுரிமை, கோயில் விவகாரங்கள், இளைஞர்களின் எதிர்காலம், அரசியல் பிரதிநிதித்துவம் என இந்தியச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகள் கிடைக்க வேண்டும்.

தேர்தல் காலங்களில் மட்டும் இந்தியர்களின் வாக்குகளை நாடும் அரசியல் அணுகுமுறை மாறி, ஆட்சியில் இருக்கும்போதும் அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்புணர்வு உருவாக வேண்டும்.

இன்று அந்த வரலாற்றுப் பேரணி நடைபெற்று 19 ஆண்டுகள் நிறைவடையும் தருணத்தில், நாம் நம்மிடமே ஒரு கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. 2007 நவம்பர் 25ஆம் தேதி ஆயிரக்கணக்கான மக்கள் எழுப்பிய உரிமைக் குரல், இன்று எவ்வளவு தூரம் இலக்கை எட்டியுள்ளது?

அரசாங்கங்கள் மாறியுள்ளன; பிரதமர்கள் மாறியுள்ளனர்; அரசியல் கூட்டணிகள் மாறியுள்ளன; இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளில் முக்கியப் பொறுப்புகளை ஏற்றுள்ளனர். ஆனால், அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரம், கல்வி வாய்ப்புகள், பொருளாதார ஏற்றத்தாழ்வு, இளைஞர்களின் எதிர்காலம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் முழுமையான தீர்வுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. ஹிண்ட்ராப் எழுச்சியின் உண்மையான வெற்றி, கடந்த காலத்தைப் பெருமையுடன் நினைவுகூர்வதில் மட்டும் இல்லை; அது முன்வைத்த நியாயமான கோரிக்கைகளை இன்றைய தலைமுறைக்கான நடைமுறைச் சாதனைகளாக மாற்றுவதில்தான் இருக்கிறது.

2007 நவம்பர் 25 என்பது ஒரு பேரணி நடைபெற்ற நாள் மட்டுமல்ல; மலேசிய இந்தியர்கள் தங்களின் அரசியல் இருப்பையும் வாக்குரிமையின் வலிமையையும் உரக்க வெளிப்படுத்திய நாள். அந்த வரலாற்றை நினைவுகூர்வோம்; அதன் பாடங்களை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவோம்; இன்னும் நிறைவேறாத கனவுகளை நனவாக்க ஒன்றிணைவோம்!

-இ.எம்.சாமி,
ஆசிரியர், திசைகள்.

மலாக்கா தேர்தல்:

ஜனநாயகத்தின் வெற்றியா, மதவாத அரசியலின் எழுச்சியா?



மலாக்கா தேர்தல் முடிவுகள் மலேசிய அரசியலில் ஒரு புதிய விவாதத்திற்கான கதவைத் திறந்துள்ளன. தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகள், தோல்வியடைந்த கட்சிகள் என்ற வழக்கமான அரசியல் கணக்குகளுக்கு அப்பால், இந்த முடிவுகள் மலேசியாவின் பல்லின ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்தும் பல கேள்விகளை எழுப்புகின்றன. மக்கள் தங்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்தி அரசியல் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இது ஜனநாயகத்தின் அடிப்படை அம்சம். ஆனால், அந்த வாக்குத் தீர்ப்பின் பின்னணியில் எந்தெந்த அரசியல் சக்திகள் செயல்பட்டன, எந்தக் கருத்துகள் மக்களிடம் செல்வாக்குச் செலுத்தின என்பதையும் ஆராய வேண்டிய தேவை இப்போது உருவாகியுள்ளது.



மலாக்காவின் 28 சட்டமன்றத் தொகுதிகளில் பாரிசான் நேஷனல் 21 இடங்களையும், பக்காத்தான் ஹராப்பான் நான்கு இடங்களையும், பெரிக்காத்தான் நேஷனல் மூன்று இடங்களையும் கைப்பற்றியுள்ளன. இந்த முடிவு பாரிசான் நேஷனலுக்கு தெளிவான அரசியல் வெற்றியை வழங்கியுள்ளதுடன், எதிர்க்கட்சிகளின் அரசியல் செல்வாக்கு குறித்தும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஆனால் இந்த வெற்றியை ஜனநாயகத்தின் வெற்றி என்று மட்டும் சுருக்கிவிட முடியுமா? அல்லது மலேசிய அரசியலில் நீண்டகாலமாகப் பேசப்பட்டுவரும் இன, மத அடையாள அரசியலின் தாக்கத்தையும் இதனுடன் இணைத்துப் பார்க்க வேண்டுமா?

மலேசிய அரசியலில் மதமும் இனமும் புதிய காரணிகள் அல்ல. குறிப்பாக மலாய் சமூகத்தின் அரசியல் அடையாளம், இஸ்லாமிய உணர்வுகள், சமூக உரிமைகள் ஆகியவை பல தசாப்தங்களாக அரசியல் விவாதங்களின் மையத்தில் இருந்து வருகின்றன.

சில அரசியல் கட்சிகள் இந்த உணர்வுகளைத் தங்களுடைய அரசியல் ஆதரவுத் தளத்தை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்றன என்ற விமர்சனமும் தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது. மதத்தின் பாதுகாப்பு, இனத்தின் உரிமை, சமூகத்தின் எதிர்காலம் போன்ற முழக்கங்கள் தேர்தல் காலங்களில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

இத்தகைய சூழலில், அரசியல் போட்டி மக்கள் நலன் சார்ந்த கொள்கைகளை மையப்படுத்துகிறதா அல்லது அடையாளங்களை முன்னிறுத்துகிறதா என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது.

எனினும், மலாக்கா தேர்தல் முடிவுகளை மதவாத அரசியலின் வெற்றியாக நேரடியாக வர்ணிப்பதும் சரியான அணுகுமுறையாக இருக்காது. வாக்காளர்களின் முடிவுகள் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அமைகின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொருளாதார நெருக்கடி, வேலைவாய்ப்பு, உள்ளூர் அபிவிருத்தி, அரசாங்கத்தின் செயல்பாடு, வேட்பாளர்களின் தனிப்பட்ட செல்வாக்கு எனப் பல அம்சங்கள் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

எனவே, ஒரு கட்சியின் வெற்றியை மத அடிப்படையிலான ஆதரவின் வெளிப்பாடாக மட்டும் எடுத்துக் கொள்வது அரசியல் யதார்த்தத்தைச் சுருக்கிப் பார்ப்பதாகிவிடும்.

அதேவேளை, மலேசியாவின் பல்லின சமூக அமைப்பில் மத அடையாள அரசியல் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தையும் அலட்சியப்படுத்த முடியாது. மலாய், சீனர், இந்தியர் மற்றும் சபா, சரவாக் மக்களின் பல்வேறு சமூக அடையாளங்கள் இணைந்திருக்கும் நாட்டில், அரசியல் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டியது அவசியம்.

ஒரு குறிப்பிட்ட இனத்தின் அல்லது மதத்தின் உணர்வுகளை மட்டுமே முன்னிறுத்தும் அரசியல் அணுகுமுறை நீண்டகாலத்தில் சமூகங்களுக்கிடையிலான நம்பிக்கையைப் பாதிக்கக்கூடும். தேர்தல் வெற்றிக்காக உருவாக்கப்படும் அரசியல் பிளவுகள், தேர்தலுக்குப் பின்னரும் சமூக உறவுகளில் தொடரக்கூடாது என்பதே முக்கியமானது.

மலாக்கா தேர்தல் முடிவுகள் எதிர்க்கட்சிகளுக்கும் ஒரு முக்கியமான அரசியல் பாடத்தை வழங்குகின்றன. மக்கள் ஏன் ஒரு குறிப்பிட்ட கட்சியைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளாமல், வெறுமனே அரசியல் கூட்டணிகளையும் தேர்தல் உத்திகளையும் மாற்றுவதால் மட்டும் வெற்றியை உறுதிப்படுத்த முடியாது.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு நம்பகமான தீர்வுகளை முன்வைப்பதும், இன மத வேறுபாடுகளைக் கடந்து அனைவருக்கும் பொருந்தக்கூடிய அரசியல் கொள்கைகளை உருவாக்குவதும் அவசியம்.

ஆளும் தரப்பைப் பொறுத்தவரையில், தேர்தல் வெற்றி என்பது வெறும் அதிகாரத்திற்கான அங்கீகாரம் அல்ல; அது மக்களுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் ஒப்பந்தமாகும். வெற்றி பெற்றவர்கள் தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்லாமல், அனைத்து சமூகங்களுக்கும் சமமான அக்கறையுடன் செயல்பட வேண்டும்.

இறுதியில், மலாக்கா தேர்தல் எழுப்பும் கேள்வி ஒரு மாநிலத்தின் அரசியல் முடிவைத் தாண்டியதாகும். மலேசியா எந்த வகையான அரசியல் எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கிறது என்பதே அதன் மையக் கேள்வி.

மத நம்பிக்கைகளை மதிப்பதும், இன அடையாளங்களைப் பாதுகாப்பதும் ஜனநாயகத்திற்கு முரணானவை அல்ல. ஆனால் அவை மற்ற சமூகங்களின் உரிமைகளையும் சமத்துவத்தையும் மறுக்கும் அரசியல் கருவிகளாக மாறும்போதுதான் பிரச்சினை உருவாகிறது.

மலேசியாவின் பலம் அதன் பன்முகத்தன்மையில் இருக்கிறது. அந்தப் பன்முகத்தன்மையை அரசியல் பலவீனமாக மாற்றாமல், தேசிய ஒற்றுமைக்கான அடித்தளமாகப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உண்டு.

மலாக்கா தேர்தல் ஜனநாயகத்தின் வழியாக வழங்கப்பட்ட மக்கள் தீர்ப்பு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த ஜனநாயகத்தின் தரத்தையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போவது தேர்தல் வெற்றிகள் மட்டுமல்ல; வெற்றிக்குப் பின்னர் ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்கும் அரசியல் பண்பாடும்தான்.

யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்ற மலாக்கா: பாதுகாக்கப்பட வேண்டிய வரலாற்றுப் பொக்கிஷம்



மலேசியாவின் வரலாற்றுப் பெருமையை உலக அரங்கில் எடுத்துக் காட்டும் நகரங்களில் மலாக்காவுக்கு தனி இடம் உண்டு. பல நூற்றாண்டுகளைக் கடந்த அரசியல் வரலாறு, கிழக்கு மேற்கை இணைத்த கடல் வணிகப் பயணம், பல்வேறு இனங்களின் கலாசாரச் சங்கமம், காலனித்துவ ஆட்சிகளின் அடையாளங்கள் எனப் பல வரலாற்றுச் சுவடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள மலாக்கா, ஒரு சுற்றுலா நகரம் மட்டுமல்ல; அது மலேசியாவின் வரலாற்று அடையாளங்களில் ஒன்று.

இந்த வரலாற்றுச் சிறப்புக்குக் கிடைத்த உலகளாவிய அங்கீகாரமாகவே 2008ஆம் ஆண்டு மலாக்காவும் பினாங்கின் ஜார்ஜ் டவுனும் இணைந்து யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்களாக அறிவிக்கப்பட்டன. மலாக்கா நீரிணை வழியாக நடைபெற்ற சுமார் 500 ஆண்டுகால வணிகம், பண்பாட்டுப் பரிமாற்றம், பல்வேறு நாகரிகங்களின் தாக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வரலாற்று நகரங்களாக இவை அங்கீகரிக்கப்பட்டன.

மலாய் சுல்தானகத்தின் ஆட்சிக் காலம், பின்னர் போர்த்துகீசியர், டச்சுக்காரர் ஆகியோரின் ஆட்சிக் காலங்கள் என ஒவ்வொரு காலகட்டமும் மலாக்காவின் கட்டடக் கலை, நகர அமைப்பு, கலாசாரம் ஆகியவற்றில் தனித்த அடையாளங்களை விட்டுச் சென்றுள்ளன. அதேவேளையில், இந்திய, சீன, மலாய் மற்றும் ஐரோப்பியப் பண்பாடுகள் ஒன்றோடொன்று கலந்த வாழும் மரபும் இந்த நகரத்தின் தனித்துவமாகத் திகழ்கிறது.

வரலாற்றைச் சுமந்து நிற்கும் கட்டடங்கள்

மலாக்காவின் பழைய நகரப் பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுக் கட்டடங்கள், தேவாலயங்கள், கோட்டைகள், பழைய நிர்வாகக் கட்டடங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவை வெறும் சுற்றுலாப் பார்வைக்குரிய இடங்கள் அல்ல. அவை பல தலைமுறைகளின் வாழ்க்கையையும் ஆட்சி மாற்றங்களையும் வணிக உறவுகளையும் பதிவு செய்துள்ள வரலாற்று ஆவணங்களாகும்.

குறிப்பாக, சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும் டச்சு காலக் கட்டடங்கள், ஸ்டாட்துயிஸ், ஆஃப் ஃபாமோசா கோட்டை, செயின்ட் பால் தேவாலயத்தின் எச்சங்கள் போன்றவை மலாக்காவின் வரலாற்றுப் பயணத்தை இன்றும் நினைவூட்டுகின்றன.

பழமையான கடைத் தெருக் கட்டடங்களும் தனித்துவமான கட்டடக் கலை அம்சங்களைக் கொண்டுள்ளன. அவற்றில் பல, சீன, மலாய், இந்திய, ஐரோப்பியக் கட்டடக் கலைத் தாக்கங்களின் கலவையை வெளிப்படுத்துகின்றன.

உலக அங்கீகாரத்துடன் வரும் பொறுப்பு

யுனெஸ்கோ அங்கீகாரம் மலாக்காவுக்கு உலகளாவிய அடையாளத்தையும் சுற்றுலாத் துறைக்கான வாய்ப்புகளையும் வழங்கியுள்ளது. ஆனால், இந்த அங்கீகாரம் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வாய்ப்பாக மட்டுமே கருதப்படக்கூடாது.

அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்த வரலாற்றுச் சிறப்புகளையும் கட்டடங்களையும் அவற்றின் உண்மையான தன்மையுடன் பாதுகாப்பதே மிக முக்கியமான பொறுப்பாகும்.

இந்தப் பொறுப்பில் பல சவால்களும் உள்ளன. பழமையான கட்டடங்களைப் பராமரிப்பதற்கான செலவுகள், அவற்றின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சுமைகள், புதிய கட்டடங்களுக்கான வளர்ச்சித் தேவைகள், சுற்றுலா நடவடிக்கைகளால்



ஏற்படும் அழுத்தங்கள் ஆகியவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

ஜக்கிய நாடுகள் மனிதக் குடியிருப்பு அமைப்பின் 2022ஆம் ஆண்டு மலாக்கா நகர ஆய்வு அறிக்கையும் இது போன்ற சவால்களைச் சுட்டிக் காட்டியுள்ளது. பாரம்பரியக் கட்டடங்களின் பராமரிப்புப் பிரச்சினைகள், சொத்து விலை உயர்வு, பயன்பாடின்றிக் கைவிடப்படும் கட்டடங்கள், நீர்வடிகால் பிரச்சினைகள், பூச்சித் தொல்லைகள், மின்சாரத் தீ விபத்து அபாயங்கள் ஆகியவை பாரம்பரியச் செல்வங்களைப் பாதிக்கக்கூடிய காரணிகளாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும், நகரமயமாக்கல், வெள்ளப் பாதிப்புகள், கடல் மட்ட உயர்வு, கடற்கரை அரிப்பு போன்ற சுற்றுச்சூழல் சவால்களும் மலாக்காவின் நீண்டகாலப் பாதுகாப்புத் திட்டத்தில் முக்கிய இடம் பெற வேண்டும்.

உள்ளூர் மக்களின் பங்களிப்பு அவசியம்

மலாக்காவின் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் அங்கு தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் மக்களின் பங்களிப்பையும் புறக்கணிக்க முடியாது. பழைய குடியிருப்புகளில் வசிக்கும் குடும்பங்கள், பாரம்பரிய உணவகங்களை நடத்தும் வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள், வழக்கமான தொழில்களில் ஈடுபடுவோர் ஆகியோரின் வாழ்க்கை முறையில்தான் மலாக்காவின் கலாச்சார அடையாளம் தொடர்ந்து உயிர்ப்புடன் இருக்கிறது.

பாரம்பரியப் பகுதிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் உள்ளூர் மக்களுக்கு பொருளாதாரச் சுமையாக மாறாமல், அவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் அமைய வேண்டும். இல்லையெனில், வரலாற்றுக் கட்டடங்கள் பாதுகாக்கப்பட்டாலும் அவற்றுடன் தொடர்புடைய மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை மெல்ல மறைந்துவிடும் அபாயம் உள்ளது.

இதற்காக பாரம்பரியக் கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கான நிதியுதவி, பராமரிப்புக்கான தொழில்நுட்ப ஆலோசனை, பாரம்பரியக் கைவினைத் தொழில்களுக்கான ஊக்குவிப்பு போன்ற திட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். பள்ளி மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் மலாக்காவின் வரலாற்றை அறிமுகப்படுத்தும் கல்வி நடவடிக்கைகளும் அவசியம். ஒரு நகரத்தின் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினர் மதித்துப் பாதுகாக்க வேண்டுமானால், முதலில் அந்த வரலாற்றை அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.



வளர்ச்சியா, பாரம்பரியப் பாதுகாப்பா?

மலாக்காவின் சுற்றுலாத் துறை வளர்ச்சி மாநிலப் பொருளாதாரத்துக்கு முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சுற்றுலா வளர்ச்சிக்கும் வரலாற்றுப் பாரம்பரியப் பாதுகாப்புக்கும் இடையே சரியான சமநிலை அவசியம்.

பழமையான கட்டடங்களை வணிகப் பயன்பாட்டுக்காக மாற்றும்போது அவற்றின் வரலாற்றுத் தன்மை சிதையாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதேபோல், புதிய கட்டடங்கள், சாலைகள், வாகனப் போக்குவரத்து உள்ளிட்ட நகர வளர்ச்சித் திட்டங்கள் பாரம்பரியப் பகுதிகளின் அடையாளத்தைப் பாதிக்காத வகையில் திட்டமிடப்பட வேண்டும்.

இது அரசாங்கத்தின் பொறுப்பு மட்டுமல்ல. வரலாற்றுக் கட்டடங்களின் உரிமையாளர்கள், வணிகர்கள், சுற்றுலாத் துறையினர், உள்ளூர் மக்கள், வரலாற்று ஆய்வாளர்கள் என அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பும் அவசியம்.

அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லப் போவது என்ன?

மலாக்காவின் வரலாற்றுப் பெருமை அதன் பழைய கட்டடங்களில் மட்டுமல்ல. அங்கு வாழும் மக்களின் மொழி, உணவு, கலை, வழிபாட்டு மரபுகள், பண்டிகைகள், பாரம்பரியத் தொழில்கள் ஆகியவற்றிலும் அந்த வரலாறு உயிர்ப்புடன் தொடர்கிறது.



அமைச்சர் பதவி விலகல்

அரசியல் தந்திரமா?

மலேசிய அரசியலில் அண்மைக்காலமாக அதிகம் பேசப்படும் தலைவர்களில் ஒருவர் ஜனநாயகச் செயல் கட்சியின் (ஜசெக.) பொதுச் செயலாளர் அந்தோணி லோக். போக்குவரத்து அமைச்சராகப் பொறுப்பு வகித்த அவர், அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருப்பது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விலகல் வெறும் அரசியல் எதிர்ப்பின் வெளிப்பாடா? அல்லது ஜசெக.வின் எதிர்காலத்தை வலுப்படுத்துவதற்காக அவர் மேற்கொண்டுள்ள திட்டமிட்ட அரசியல் நகர்வா? மலாக்கா மாநிலத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து, அடுத்த 8 முதல் 12 மாதங்களில் கட்சியைப் பலப்படுத்துவதே தனது முக்கியப் பணியாக இருக்கும் என்று அவர் அறிவித்திருப்பது இந்தக் கேள்விக்கு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது.

நஜிப் ரசாக்கின் எஞ்சிய சிறைத்தண்டனையை வீட்டுக் காவலில் கழிக்க அனுமதித்த நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னணியில், ஜசெக எடுத்த அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் அந்தோணி லோக் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். செப்டம்பர் மாதமே அவர் தனது ராஜினாமா கடிதத்தைப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிமிடம் சமர்ப்பித்திருந்தார்.

பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்கத் தொடர்ந்து அமைச்சராகப் பணியாற்றிய அவர், நவம்பர் 10ஆம் தேதி தனது விலகலை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். இதனை மலாக்கா தேர்தல் தோல்வியின் விளைவாகப் பார்க்க முடியாது. மாறாக, கட்சியின் அரசியல் கொள்கைக்கும் அதன் தலைமைத்துவத்தின் பொறுப்புக்கும் இடையிலான உறுதியான நிலைப்பாடாகவே இதனை அணுக வேண்டும்.

எனினும், மலாக்கா மாநிலத் தேர்தல் முடிவுகள் ஜசெக.வுக்கும் பக்காத்தான் ஹராப்பானுக்கும் புதிய அரசியல் சவால்களை உருவாக்கியுள்ளன. அண்மையில் நடைபெற்ற சபா, ஜோகூர், நெகிரி செம்பிலான் தேர்தல்களிலும் எதிர்பார்த்த அரசியல் முன்னேற்றத்தைப் பெற முடியாத நிலையில், மலாக்காவிலும் பக்காத்தான் ஹராப்பான் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

ஜசெக தனது நான்கு தொகுதிகளைத் தக்கவைத்திருந்தாலும், அந்த வெற்றிகள் மட்டுமே கட்சியின் ஒட்டுமொத்த அரசியல் செல்வாக்கை உறுதிப்படுத்திவிடாது. குறிப்பாக, சீன வாக்காளர்களின் ஆதரவு, மலாய் வாக்காளர்களிடம் கட்சியின் அணுகுமுறை, இளைஞர்களின் அரசியல் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை மீண்டும் மதிப்பீடு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் அந்தோணி லோக் முன்வைத்துள்ள அடுத்த 8 முதல் 12 மாதங்களுக்கான திட்டம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. பொதுத் தேர்தல் 16இல் ஜசெக வென்ற 40 நாடாளுமன்றத் தொகுதிகளையும் தக்கவைத்துக் கொள்வதற்கான அடித்தளத்தை அமைப்பதே தனது முக்கியப் பணிகளில் ஒன்று என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, தொகுதி வாரியான மக்கள் தொடர்பு, உள்ளூர் தலைமைத்துவத்தை வலுப்படுத்துதல், இளைஞர்களை அரசியல் செயல்பாட்டில் ஈடுபடுத்துதல், தொகுதி அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அமைச்சர் பதவியின் நிர்வாகப் பொறுப்புகள் இல்லாத நிலையில், கட்சியின் அடித்தளத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு அவருக்கு அதிக நேரமும் வாய்ப்பும் கிடைக்கலாம்.

ஜசெக எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால், அதன் பாரம்பரிய ஆதரவாளர்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதுடன், புதிய வாக்காளர் பிரிவுகளின் ஆதரவையும் பெறுவதாகும். மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சியாக இருப்பதால், அரசாங்கத்தின் முடிவுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஜசெக.வுக்கு உள்ளது.

அதேநேரத்தில், கட்சியின் அடிப்படைக் கொள்கைகளான ஊழலற்ற நிர்வாகம், சமத்துவம், ஜனநாயகம், சமூக நீதி ஆகியவற்றில் சமரசம் செய்யவில்லை என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டியுள்ளது. ஆளும் கூட்டணியில் இருப்பதற்காகக் கட்சியின் தனித்துவமான அரசியல் அடையாளம் மங்கிவிடக்கூடாது. இந்த இரண்டுக்கும் இடையில் சரியான சமநிலையை உருவாக்குவது அந்தோணி லோக்கின் தலைமைத்துவத்திற்கான முக்கியச் சோதனையாகும்.

அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருப்பது அவருக்கு அரசியல் ரீதியாக ஒரு புதிய சுதந்திரத்தையும் பொறுப்பையும் வழங்கியுள்ளது. அமைச்சரவையின் கூட்டு முடிவுகளையும் அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டுப்பாடுகளையும் கருத்தில் கொள்ள வேண்டிய கட்டாயம் குறைந்துள்ள நிலையில், கட்சியின் கொள்கைகள், தொண்டர்களின் எதிர்பார்ப்புகள், தொகுதி அமைப்புகளின் பலவீனங்கள் ஆகியவற்றில் நேரடியாகக் கவனம் செலுத்த முடியும்.

இருப்பினும், அமைச்சர் பதவியைத் துறந்தது மட்டுமே கட்சியின் செல்வாக்கை மீட்டெடுக்கப் போதுமானதல்ல. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அரசியல் அணுகுமுறை, நம்பகமான உள்ளூர் தலைவர்கள், தேர்தல் வெற்றிக்கான தெளிவான வியூகங்கள் ஆகியவை அவசியம்.

அந்தோணி லோக்கின் இந்த அரசியல் நகர்வைத் தந்திரம் என்று மட்டும் சுருக்கிவிடுவது சரியான மதிப்பீடாக இருக்காது. அமைச்சர் பதவியைவிடக் கட்சியின் எதிர்காலத்துக்கு முன்னுரிமை அளிக்கும் வாய்ப்பாகவும் இதனைப் பார்க்கலாம்.

அடுத்த 8 முதல் 12 மாதங்கள் அவருக்கு மிகவும் முக்கியமானவை. அந்தக் காலகட்டத்தில் ஜசெக.வின் அமைப்புரீதியான பலத்தை அதிகரித்து, பல இன மக்களிடையேயும் நம்பிக்கையைப் பெறக்கூடிய கட்சியாக மாற்ற முடிந்தால், அவரது பதவி விலகல் ஒரு முக்கியமான அரசியல் திருப்புமுனையாக அமையலாம். இல்லையெனில், அது வெறும் அரசியல் அடையாள நடவடிக்கையாகவே பார்க்கப்படும். மலாக்கா தேர்தல் ஜசெக.வுக்கு ஓர் எச்சரிக்கை மணியாக ஒலித்துள்ளது. அந்த எச்சரிக்கையை உணர்ந்து கட்சியைப் புதுப்பித்து, மக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதே இப்போது அதன் முன்னுரிமையாக இருக்க வேண்டும். அந்தோணி லோக்கிடம் அனுபவமும் அரசியல் நிர்வாகத் திறனும் உள்ளன. அவற்றை கட்சியின் அடித்தளத்தை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்துவாரா என்பதே எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

அமைச்சர் பதவியை இழந்த ஒரு தலைவர் என்ற அடையாளத்தைவிட, கட்சியை மீண்டும் வலிமைப்படுத்திய தலைவராக வரலாற்றில் இடம்பிடிப்பாரா அந்தோணி லோக்? அடுத்த 8 முதல் 12 மாதங்களே அதற்கான பதிலை வழங்கும்!

மலாக்காவின் வளர்ச்சிக்கு வான்வழி இணைப்பு அவசியம்

மலாக்கா என்றாலே வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம், சுற்றுலாத் தலங்கள், பாரம்பரியக் கட்டடங்கள், உள்ளூர் உணவுகள், கடல்சார் வர்த்தக வரலாறு ஆகியவை நினைவுக்கு வருகின்றன. ஆண்டுதோறும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இந்த மாநிலத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு விமானப் போக்குவரத்து எந்த அளவுக்கு உதவ முடியும் என்பது கவனிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த சுற்றுலா வளர்ச்சிச் சூழலும் இன்றைய தேவைகளும் ஒன்றல்ல. பயணிகள் விரைவான போக்குவரத்தை எதிர்பார்க்கின்றனர். முதலீட்டாளர்கள் எளிதான தொடர்புகளையும் தொழில் நிறுவனங்கள் திறமையான போக்குவரத்து வசதிகளையும் நாடுகின்றன. இத்தகைய சூழலில், மலாக்கா அனைத்துலக விமான நிலையத்தின் எதிர்காலம் என்பது விமானப் போக்குவரத்துடன் மட்டும் தொடர்புடையதல்ல; மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு, சுற்றுலா மற்றும் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றுடனும் தொடர்புடையதாகும்.

சுற்றுலா வளர்ச்சியும் விமான நிலையத்தின் பங்கும்

பத்து பெரண்டாம் பகுதியில் அமைந்துள்ள மலாக்கா அனைத்துலக விமான நிலையம், 1952ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 2009ஆம் ஆண்டு திறக்கப்பட்ட புதிய பயணிகள் முனையம் ஆண்டுக்கு 15 லட்சம் பயணிகளைக் கையாளும் வகையில் அமைக்கப்பட்டதாக மலேசிய ஏர்போர்ட்ஸ் பெர்ஹாட் வெளியிட்டுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விமான நிலையம் மலாக்கா நகரத்திலிருந்து சுமார் 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

மலாக்காவின் சுற்றுலாத் துறை தொடர்ந்து வளர்ந்து வருவதால், விமானப் போக்குவரத்துக்கான வாய்ப்புகளும் கவனத்தைப் பெறுகின்றன. 2025ஆம் ஆண்டில் மலாக்காவுக்கு 1.59 கோடிக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்ததாகவும், இது முந்தைய ஆண்டைவிட 5.9 விழுக்காடு அதிகம் என்றும் மாநில ஆளுநர் துன் முகமட் அலி ருஸ்தாம் தெரிவித்துள்ளார். 2026ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் 72 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்த எண்ணிக்கைகள் மாநிலத்தின் சுற்றுலா ஈர்ப்பை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும், சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கையையும் விமானம் மூலம் வந்த பயணிகளின் எண்ணிக்கையையும் ஒன்றாகக் கருத முடியாது. விமான நிலையத்தின் உண்மையான பங்களிப்பை மதிப்பிட, அதன் பயணிகள் எண்ணிக்கை, விமானச் சேவைகளின் அடிக்கடி இயக்கம், பயணிகளின் வருகை நாடுகள் மற்றும் சுற்றுலாத் துறைக்கான நேரடிப் பொருளாதாரப் பங்களிப்பு ஆகியவற்றைத் தனித்தனியாக ஆராய வேண்டும்.



புதிய விமான வழித்தடங்கள்: வாய்ப்பும் சவாலும்

மலாக்கா விமான நிலையத்தின் வான்வழி இணைப்பை வலுப்படுத்தும் முயற்சிகள் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2026ஆம் ஆண்டில் இந்தோனேசியா பத்தாம், கோத்தா பாரு, பினாங்கு ஆகிய இடங்களுக்குப் புதிய விமான வழித்தடங்களை அறிமுகப்படுத்த விமான நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக மாநில முதலமைச்சர் டத்தோ ஸ்ரீ அப்துல் ராவுஃப் யூசோ ஜூன் மாதத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த வழித்தடங்கள் செயல்பாட்டுக்கு வந்தால், மலாக்காவுக்குப் பயணம் செய்வதற்கான மாற்று வாய்ப்புகள் உருவாகலாம். குறிப்பாக, நீண்ட தூரச் சாலைப் பயணத்தைத் தவிர்க்க விரும்பும் பயணிகளுக்கும் குறுகிய காலச் சுற்றுலாவைத் திட்டமிடுவோருக்கும் இத்தகைய இணைப்புகள் பயனளிக்கக்கூடும்.

ஆனால், புதிய வழித்தடங்கள் அறிவிக்கப்படுவது மட்டுமே வெற்றிக்கான அளவுகோல் அல்ல. அவை எப்போது தொடங்குகின்றன, எத்தனை முறை இயக்கப்படுகின்றன, பயணிகளின் தேவை எவ்வாறு அமைகிறது, சேவைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான வணிகச் சாத்தியம் உள்ளதா என்பவையும் முக்கியமானவை. விமான நிறுவனங்களின் முடிவுகள், பயணிகளின் எண்ணிக்கை, செயல்பாட்டுச் செலவுகள் ஆகியவற்றைப் பொறுத்தே பல திட்டங்கள் நடைமுறைக்கு வர முடியும்.

ஓடுபாதை நீட்டிப்பும் எதிர்காலத் திட்டங்களும்

மலாக்கா விமான நிலையத்தின் ஓடுபாதையை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. 2026 ஆகஸ்ட் மாதத்தில், புதிய தலைமுறை விமானங்கள் முழுச் சுமையுடன் தரையிறங்கும் வகையில் ஓடுபாதையை நீட்டிக்க மத்திய அரசின் உதவியை மாநில ஆளுநர் கோரியதாக பெர்னாமா செய்தி வெளியிட்டது. பெரிய விமானங்களைக் கையாளும் திறன் அதிகரித்தால், புதிய விமான நிறுவனங்களையும் வழித்தடங்களையும் ஈர்ப்பதற்கான வாய்ப்புகள் உருவாகலாம். அதேவேளையில், இத்தகைய திட்டங்கள் விமானப் பாதுகாப்பு, தொழில்நுட்பத் தேவைகள், நிலம், முதலீடு, சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்புச் செலவு ஆகியவற்றையும் கருத்தில் கொண்டே முன்னெடுக்கப்பட வேண்டும்.

எனவே, ஓடுபாதை நீட்டிப்பு குறித்த அறிவிப்பை உடனடியாக நிறைவேறிவிட்ட திட்டமாகக் கருத முடியாது. அதன் நிதி ஒதுக்கீடு, ஒப்புதல், கட்டுமானக் கால அட்டவணை மற்றும் செயல்படுத்தும் பொறுப்பு ஆகியவை தெளிவுபடுத்தப்பட வேண்டியவை.







விமான நிலையத்துக்கு அப்பால் கிடைக்க வேண்டிய பயன்

விமான நிலைய வளர்ச்சியின் வெற்றியைப் பயணிகள் எண்ணிக்கையால் மட்டும் அளவிட முடியாது. விமானத்தில் வரும் சுற்றுலாப் பயணிகள் மலாக்காவில் எத்தனை நாட்கள் தங்குகிறார்கள்? அவர்கள் உள்ளூர் உணவகங்கள், சிறு வணிகங்கள், தங்கும் விடுதிகள், சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் போக்குவரத்துச் சேவைகளில் எவ்வளவு செலவிடுகிறார்கள்? அந்த வருவாய் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை எவ்வாறு மேம்படுத்துகிறது? இத்தகைய கேள்விகளுக்கான பதில்களும் அவசியம்.

விமான நிலையத்திலிருந்து முக்கிய சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் போக்குவரத்து வசதிகள், தெளிவான வழிகாட்டுதல்கள், தரமான தங்குமிடங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான தகவல் சேவைகள் ஆகியவையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். விமானத்தில் வந்திறங்கும் பயணிகளுக்கு நகரை அடைவதில் சிரமம் ஏற்பட்டால், வான்வழி இணைப்பால் கிடைக்கும் பயனின் ஒரு பகுதி குறைந்துவிடும்.

அதேபோல், புதிய முதலீடுகள் உருவாகும்போது உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் கிடைக்க வேண்டும். விமானப் பயிற்சி, விமானப் பராமரிப்பு, தளவாடச் சேவைகள் போன்ற துறைகளில் மலாக்காவுக்கு வாய்ப்புகள் உள்ளன.



2025ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட விமானப் போக்குவரத்து சிறப்பு மையத் திட்டத்தில், ஹெலிகாப்டர் விமானிப் பயிற்சி, பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு வசதிகள், தளவாடச் சேவைகள் ஆகியவை இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்டம் 2026ஆம் ஆண்டு தொடங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த முயற்சிகள் நடைமுறைக்கு வரும்போது, உள்ளூர் இளைஞர்களின் திறன்களையும் வேலை வாய்ப்புகளையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் உருவாகலாம்.

வளர்ச்சி மக்களையும் சென்றடையுமா?

மலாக்கா விமான நிலையத்தின் எதிர்காலம் குறித்து விவாதிக்கும்போது, புதிய விமானங்கள், நீளமான ஓடுபாதை, அதிகரிக்கும் பயணிகள் எண்ணிக்கை ஆகியவற்றுடன் சேர்த்து, மக்களுக்குக் கிடைக்கும் பொருளாதாரப் பயனையும் மதிப்பிட வேண்டும்.

விமான நிலையத்தில் முதலீடு செய்வது ஒரு தொடக்கம் மட்டுமே. அந்த முதலீடு உள்ளூர் நிறுவனங்களுக்கு வணிக வாய்ப்புகளை உருவாக்குகிறதா, இளைஞர்களுக்குத் தரமான வேலை வாய்ப்புகளை வழங்குகிறதா, சிறு வணிகர்களின் வருமானத்தை உயர்த்துகிறதா, சுற்றுலா வருவாயை மாநிலம் முழுவதும் பரவலாக்குகிறதா என்பவையே அதன் நீண்டகால வெற்றியைத் தீர்மானிக்கும்.

மலாக்காவின் வரலாற்றுச் சிறப்பும் சுற்றுலா ஈர்ப்பும் அதற்கென ஒரு வலுவான அடித்தளத்தை வழங்குகின்றன. அந்த அடித்தளத்தைப் பயன்படுத்தி, பாதுகாப்பான விமானப் போக்குவரத்து, நடைமுறைக்கு ஏற்ற முதலீடுகள், பயணிகளுக்கான சிறந்த இணைப்புகள், உள்ளூர் மக்களுக்கான திறன் மேம்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்க முடிந்தால், விமான நிலையம் மாநிலத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கலாம்.

இறுதியில், விமான நிலையத்தின் வளர்ச்சி என்பது விமானங்கள் தரையிறங்குவதிலும் புறப்படுவதிலும் முடிந்துவிடக்கூடாது. அதன் மூலம் உருவாகும் வாய்ப்புகள் மலாக்கா மக்களின் வீடுகளையும் தொழில்களையும் வாழ்வாதாரத்தையும் சென்றடைய வேண்டும். அதுவே வான்வழி இணைப்பை உண்மையான பொருளாதார வளர்ச்சியாக மாற்றும் அளவுகோலாக அமையும்.

மனித மூளையா, இயந்திர மாயையா?

செயற்கை நுண்ணறிவு யுகம்

இருபத்தோராம் நூற்றாண்டின் மிகப்பெரிய அறிவியல் புரட்சியாகச் செயற்கை நுண்ணறிவு உருவெடுத்துள்ளது. மனிதனின் சிந்தனை ஆற்றலையும், முடிவெடுக்கும் திறனையும் இயந்திரங்களுக்கு வழங்கும் இந்தத் தொழில்நுட்பம் இன்று உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது. மருத்துவம் முதல் விண்வெளி வரை அனைத்துத் துறைகளிலும் கால்பதித்துள்ள செயற்கை நுண்ணறிவு, நாளைய உலகத்தை எவ்வாறு மாற்றியமைக்கப் போகிறது என்பது மிக முக்கியமான விவாதமாக மாறியுள்ளது.



மனித மூளையைப் போலவே சிந்தித்து, தரவுகளை ஆய்வு செய்து, சுயமாக முடிவெடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட கணினி மென்பொருள் மற்றும் இயந்திரங்களின் தொகுப்பே செயற்கை நுண்ணறிவு ஆகும். சுருக்கமாகக் கூறினால், மனிதனின் நுண்ணறிவை இயந்திரங்களின் வழியே செயல்படுத்துவதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சி மனித வாழ்க்கையை மிகவும் எளிதாகவும் வேகமாகவும் மாற்றியுள்ளது. மருத்துவத் துறையில் நோய்களைத் தொடக்க நிலையிலேயே துல்லியமாகக் கண்டறியவும், சிக்கலான அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளவும் இது பெரிதும் உதவுகிறது.

கல்வித் துறையில் மாணவர்களின் கற்கும் திறனுக்கு ஏற்ப தனிப்பயனாக்கப்பட்ட பாடத்திட்டங்களை வழங்கி கற்றலை எளிதாக்குகிறது. மேலும், வானிலை மாற்றங்களை முன்கூட்டியே கணித்து உழவர்களுக்கு உதவுவதோடு, தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனையும் பன்மடங்கு உயர்த்தியுள்ளது.



மனிதர்கள் செய்யக்கூடிய கடினமான மற்றும் திரும்பத் திரும்பச் செய்யும் பணிகளை இயந்திரங்கள் மிகக் குறைந்த நேரத்தில் பிழையின்றிச் செய்கின்றன.

அதேவேளையில், ஒவ்வொரு தொழில்நுட்ப வளர்ச்சியிலும் நன்மைகளைப் போலவே சில ஆபத்தான சவால்களும் ஒளிந்துள்ளன. இயந்திரங்களின் ஆதிக்கம் அதிகரிப்பதால், பல துறைகளில் மனிதர்களின் வேலைவாய்ப்புகள் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இணையத்தில் பகிரப்படும் தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அனைத்து வேலைகளுக்கும் செயற்கை நுண்ணறிவைச் சார்ந்திருப்பதால், மனிதனின் சுயசிந்தனையும் படைப்பாற்றலும் மழுங்கிப் போகும் சூழல் உருவாகியுள்ளது.



குறிப்பாக, போலி காணொளிகளை உருவாக்குதல் மற்றும் இணையவழிக் குற்றங்கள் அதிகரிக்க இத்தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தப்படுவது பெரும் கவலையை அளிக்கிறது.





எதிர்கால உலகம் செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை. தானியங்கி ஊர்திகள், நவீன நகரங்கள் என உலகம் புதுப்பொலிவு பெறும். ஆனால், இயந்திரங்கள் ஒருபோதும் மனிதனின் உணர்வுகளுக்கும், அறநெறிகளுக்கும் மாற்றாக முடியாது. எனவே, புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப மனிதர்கள் தங்கள் திறன்களைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அறிவியல் என்பது ஒரு நல்ல பணியாளன், ஆனால் மோசமான எஜமானன் என்பார்கள். செயற்கை நுண்ணறிவு எனும் அற்புதக் கருவியை மனிதகுலத்தின் நன்மைக்காகவும், ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்காகவும் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.



தொழில்நுட்பத்தைக் கட்டுப்படுத்தி வழிநடத்தும் ஆற்றல் மனிதனிடம் இருக்கும் வரை, செயற்கை நுண்ணறிவு எதிர்கால உலகிற்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையும்.



மௌனம் கலைக்கும்

‘ஆட்டிசம் அட் ஹோம்’

மதியிறுக்கம் (ஆட்டிசம்) கொண்ட குழந்தைகளின் அன்றாட வாழ்க்கையையும், அவர்களின் தொடர்பாடல் திறனையும் மேம்படுத்தும் நோக்கில் ‘ஆட்டிசம் அட் ஹோம்’ (Autism at Home) எனும் இலவசத் திறன்பேசிச் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆப்பிள் ஆப் ஸ்டோர் மற்றும் கூகுள் பிளே தளங்களில் இலவசமாகக் கிடைக்கும் இந்தச் செயலி, ஆங்கிலம் மற்றும் மலாய் ஆகிய இரு மொழிகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பல் துலக்குதல் போன்ற அன்றாடக் கடமைகளைப் படங்கள் மூலம் எளிமையாகப் புரியவைக்கவும், குழந்தைகளின் நடத்தை சார்ந்த எதிர்பார்ப்புகளைத் தெளிவாக அமைக்கவும் இது உதவுகிறது.

பெற்றோர்கள் எப்போதும் புத்தகங்களையோ அல்லது பட அட்டைகளையோ (Flash cards) கையில் எடுத்துச் செல்ல முடியாது. அந்தக் குறையைப் போக்கும் வகையில், இந்தச் செயலி ஒரு உடனடி டிஜிட்டல் மாற்றாகச் செயல்படுகிறது. மேலும், பேச இயலாத குழந்தைகளுக்கான தொடர்பாடல் உதவிகள், கல்வி சார்ந்த கதைகள், காணொளிகள் மற்றும் தகவல்களைத் தேட உதவும் ’சாட்போட்’ (Chatbot) வசதியும் இதில் இணைக்கப்பட்டுள்ளன.





கோலாலம்பூரில் நடைபெற்ற ‘ஏர்லி ஆட்டிசம் புராஜெக்ட்’ (Early Autism Project - EAP) அமைப்பின் 20-வது ஆண்டு நிறைவு நிதி திரட்டும் விழாவில், கூட்டரசுப் பிரதேசங்களுக்கான பிரதமர் துறை அமைச்சர் ஹன்னா யோ இந்தச் செயலியை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார். அடுத்த 12 மாதங்களுக்குள் இந்தச் செயலி சுமார் 5,000 குடும்பங்களைச் சென்றடையும் என EAP இயக்குநர் டாக்டர் ஜோச்செபெட் ஜசக்ஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அக்டோபர் 2024 நிலவரப்படி, நாடு முழுவதும் 99,000 பேர் மதியிறுக்கம் கொண்டவர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 6 முதல் 12 வயதுக்குட்பட்ட 58,000 குழந்தைகளும், 13 முதல் 18 வயதுக்குட்பட்ட 17,000 பேரும் அடங்குவர். பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், கோலாலம்பூர் மாநகர் மன்றம் (DBKL) தனது ’கோ-கேஎல்’ (GoKL) பேருந்து ஒன்றை மதியிறுக்கக் குழந்தைகளுக்கு உகந்த வண்ணங்களில் வடிவமைத்துள்ளது. அத்துடன், குதிரையேற்றச் சிகிச்சை வசதிகளுக்கும் அரசாங்கம் மானியம் வழங்குகிறது.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் மதியிறுக்கக் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கோலாலம்பூரில் உள்ள பொதுப் பூங்காக்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டு மதியிறுக்கக் குழந்தைகளுக்கெனப் பிரத்தியேக விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்களுக்குப் பெரிதும் உதவும் இந்தத் தொழில்நுட்ப முயற்சி, மதியிறுக்கக் குழந்தைகள் சுயாதீனமாகச் செயல்படவும், சமூகத்துடன் இணைந்து வாழவும் ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுத்துள்ளது.





பொருளாதாரம் வளர்கிறது... மக்களின் வாழ்க்கை உயர்கிறதா?

மலேசியாவின் 2026 பொருளாதார வளர்ச்சி சாதாரணக் குடும்பங்களுக்குத் தரும் பலன் என்ன?

ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்கிறது என்ற செய்தி மகிழ்ச்சியளிக்கலாம். ஆனால், மாத இறுதியில் குடும்பச் செலவுகளைக் கணக்கிடும் சாதாரண மக்களுக்கு அந்த வளர்ச்சி எந்த அளவுக்கு நன்மை தருகிறது என்பதே முக்கியமான கேள்வி. மலேசியாவின் 2026 பொருளாதார நிலைமை இந்தக் கேள்வியை மீண்டும் எழுப்பியுள்ளது. நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணித்தாலும், உணவுப் பொருட்களின் விலை, வீட்டு வாடகை, போக்குவரத்துச் செலவு, கல்வி மற்றும் மருத்துவச் செலவுகள் குடும்பங்களின் நிதிநிலையைத் தீர்மானிக்கின்றன.

மலேசியப் புள்ளிவிவரத் துறையின் (DOSM) மூன்றாம் காலாண்டுக்கான முன்கூட்டிய மதிப்பீட்டின்படி, 2026ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டின் பொருளாதாரம் 5.5 விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. மூன்றாம் காலாண்டின் வளர்ச்சி 5.3 விழுக்காடாகும். உற்பத்தி, சேவை மற்றும் கட்டுமானத் துறைகளின் பங்களிப்பு இந்த வளர்ச்சிக்கு ஆதரவாக அமைந்துள்ளது. இந்த வளர்ச்சி மலேசியப் பொருளாதாரத்தின் வலிமையை வெளிப்படுத்தினாலும், அதன் பலன் அனைத்துக் குடும்பங்களையும் சமமாகச் சென்றடைகிறதா என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய அம்சம்.

விலைவாசி இன்னும் சவால்தான்

2026 செப்டம்பரில் நாட்டின் பணவீக்கம் 1.8 விழுக்காடாகப் பதிவாகியுள்ளது. உணவு மற்றும் பானங்கள் பிரிவிலும் இதே அளவு பணவீக்கம் காணப்பட்டது. பணவீக்கம் குறைந்திருப்பது நல்ல அறிகுறியாக இருந்தாலும், ஏற்கெனவே உயர்ந்துள்ள பொருட்களின் விலைகள் குறைந்துவிட்டன என்று பொருளல்ல. விலை உயர்வின் வேகம் மட்டுமே குறைந்திருக்கலாம்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தங்களது வருமானத்தின் பெரும்பகுதியை உணவு, வாடகை, போக்குவரத்து போன்ற அடிப்படைத் தேவைகளுக்குச் செலவிடுவதால், சிறிய விலையேற்றம்கூட அவர்களின் குடும்ப வரவு செலவுத் திட்டத்தைப் பாதிக்கிறது.

சம்பளம் உயர்ந்தால் மட்டும் போதுமா?

DOSM வெளியிட்ட ஜூன் 2026 தரவுகளின்படி, முறையான துறையில் பணிபுரியும் மலேசியக் குடிமக்களின் நடுநிலை மாதச் சம்பளம் RM3,000 ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது இது 4.8 விழுக்காடு அதிகமாகும். இது வரவேற்கத்தக்க முன்னேற்றம். ஆனால் சம்பள உயர்வுக்கு இணையாக வாழ்க்கைச் செலவுகளும் அதிகரித்தால், குடும்பங்களின் கைகளில் எஞ்சும் பணம் குறைவாகவே இருக்கும்.

எனவே சம்பள உயர்வுடன் மக்களின் வாங்கும் சக்தியும் அதிகரிக்கிறதா என்பதே உண்மையான அளவுகோல்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறதா?

2026 செப்டம்பரில் மலேசியாவின் வேலையின்மை விகிதம் 2.9 விழுக்காடாக இருந்தது. வேலைவாய்ப்புச் சந்தை நிலையான நிலையில் இருப்பதை இது காட்டுகிறது. இருப்பினும், இளைஞர்களுக்குக் கல்வித் தகுதிக்கு ஏற்ற வேலை, நியாயமான சம்பளம், தொழில்முறை முன்னேற்றம் ஆகியவை கிடைப்பதும் அவசியம்.

குறிப்பாக மலேசிய இந்திய இளைஞர்கள் செயற்கை நுண்ணறிவு, மின்னணுவியல், தொழில்நுட்பம், மருத்துவம் போன்ற வளர்ந்து வரும் துறைகளில் தங்களது திறன்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

மலேசியாவின் பொருளாதார வளர்ச்சி எதிர்கால முதலீடுகளுக்கும் புதிய வேலைவாய்ப்புகளுக்கும் சாதகமான சூழலை உருவாக்குகிறது. ஆனால், குறைந்த மற்றும் நடுத்தர வருமானக் குடும்பங்களுக்கு ஏற்ற வீடுகள், தரமான பொதுப் போக்குவரத்து, மலிவான மருத்துவச் சேவைகள், கல்வி வாய்ப்புகள் ஆகியவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இறுதியாக, ஒரு நாட்டின் பொருளாதார வெற்றியை அதன் வளர்ச்சி விகிதத்தால் மட்டும் அளவிட முடியாது. ஒரு குடும்பம் மாதச் சம்பளத்தில் நிம்மதியாக வாழ முடிகிறதா? இளைஞர்களுக்கு நல்ல வேலை கிடைக்கிறதா? பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விச் செலவைச் சமாளிக்க முடிகிறதா? என்பவையே உண்மையான முன்னேற்றத்தின் அடையாளங்கள்.

பொருளாதாரம் வளர்வது நாட்டின் வெற்றி; அந்த வளர்ச்சியின் பலன் ஒவ்வொரு குடும்பத்தையும் சென்றடைவதே உண்மையான முன்னேற்றம்!



> “மு. வரதராசு அடித்தட்டு மக்களின் உரிமைக்காக ஓய்வின்றிப் போராடிய சமூகச் செயற்பாட்டாளர். ஷா ஆலம், புக்கிட் ஜெலுத்தோங்கில் பிறந்து வளர்ந்தவர். சில மனிதர்கள் தங்களுக்காக வாழ்கிறார்கள். இன்னும் சிலர் தங்களைச் சுற்றியுள்ள மக்களின் துயரங்களையும் பிரச்சினைகளையும் தங்களுடையதாகக் கருதி வாழ்கிறார்கள். மலேசியத் தமிழ்ச் சமூகத்தில் அத்தகைய சமூகப் பொறுப்புணர்வுடன் இயங்கியவர்களில் ஒருவர் மு. வரதராசு.”

போராட்டக் களத்தில் ஒலித்த குரல் ஓய்ந்தது

பினாங்கு பயனீட்டாளர் சங்கம், மலேசிய மண்ணின் தோழர்கள் கழகம் உள்ளிட்ட அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்ட அவர், குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பெண்களின் கண்ணியம், பொதுமக்களின் சுகாதாரம் ஆகியவற்றுக்காகக் குரல் கொடுத்தவர்.

1980ஆம் ஆண்டுகளில் காப்பார் வட்டாரத்தின் கம்போங் பிரப்பாட்டில் சீனருக்குச் சொந்தமான கோழிப்பண்ணையால் ஈக்கள் பெருகி, அப்பகுதி மக்களின் சுகாதாரம் பாதிக்கப்பட்டபோது அவர் முன்னெடுத்த நடவடிக்கை குறிப்பிடத்தக்கது. அப்போதைய சுகாதாரத் துறை துணை அமைச்சர் டத்தோ கே. பத்மநாபனை நேரில் வரவழைத்து, பிரச்சினையின் தீவிரத்தை எடுத்துரைத்து, அந்தக் கோழிப்பண்ணையை மூடுவதற்கான நடவடிக்கைக்கு வழிவகுத்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பிலும் அவர் காட்டிய அக்கறை முக்கியமானது. தோட்டங்களில் களைகளை அழிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பாராகுவாட் (Paraquat) களைக்கொல்லி மருந்து தொழிலாளர்களின் உடல்நலத்திற்கு ஏற்படுத்தக்கூடிய ஆபத்துகளை உணர்ந்து, மண்ணின் தோழர்கள் கழகத்தின் வழியாக அதன் பயன்பாட்டைத் தடைசெய்யப் போராடினார். அந்த முயற்சியில் வெற்றியும் கண்டார்.

தோட்டப்புறப் பெண் தொழிலாளர்கள் எதிர்கொண்ட பாலியல் தொல்லைகள் குறித்த பிரச்சினைகளையும் அவர் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தார். அதிகாரம் கொண்ட கங்காணிகள் மற்றும் நிர்வாகத் தரப்பினரின் அத்துமீறல்களுக்கு எதிராகப் பெண்களின் குரல் ஒலிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதேபோன்று, தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாதச் சம்பள முறைக்கான போராட்டத்திலும் முக்கியப் பங்காற்றியவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

அவரது சமூகப் பார்வை போராட்டங்களோடு மட்டும் நின்றுவிடவில்லை. எங்கே என் பங்கு? என்ற நூலின் வழியாகவும் அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளையும் உரிமைக் கோரிக்கைகளையும் பதிவு செய்தார்.

அவரது போராட்டச் செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தவர்களுக்கு, மு. வரதராசு என்ற பெயர் வெறும் செய்தித் தலைப்பல்ல; மக்களின் பிரச்சினைகளுக்காகக் களத்தில் நின்ற ஒரு மனிதரின் அடையாளம்.

இன்று அவர் நம்மிடையே இல்லை. ஆனால், அவர் எழுப்பிய கேள்விகளும், முன்னெடுத்த போராட்டங்களும், சமூகத்தின் நினைவில் தொடர்ந்து வாழ வேண்டியவை. ஒரு போராளி மறையலாம்; ஆனால் அவர் போராடிய உரிமைகளின் வரலாறு மறைந்துவிடக் கூடாது!

- மலாக்காவில் தொடங்கிய மருத்துவக் கல்வி...
- ஜப்பான், பிரான்ஸ் வரை நீண்ட சிறப்புப் பயிற்சி...
- இன்று நுண் அறுவைச் சிகிச்சையில் நாட்டின் கவனத்தை ஈர்த்துள்ள நிபுணர்!

மனித உடலில் மிகவும் நுணுக்கமான அமைப்புகளைக் கொண்ட உறுப்புகளில் கை முக்கியமானது. ஒரு விரலின் சிறிய அசைவுக்குக்கூட நரம்புகள், இரத்த நாளங்கள், தசைகள், தசைநாண்கள் எனப் பல அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவற்றில் ஏதேனும் ஒன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டால், ஒருவரின் அன்றாட வாழ்க்கையே மாறிவிடக்கூடும். இத்தகைய சிக்கலான காயங்களுக்கு நவீன மருத்துவத்தின் மூலம் நம்பிக்கை அளித்து வருபவர்களில் ஒருவர் மலேசியாவின் நுண் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் அலன் ரவி ராஜகோபால்.

துண்டித்தக் கையை மீட்ட மருத்துவ நிபுணர்

டாக்டர் அலன் ரவி ராஜகோபால்

மலேசிய மருத்துவத் துறையில் தனித்துவமான பயணம்





அண்மையில் தாக்குதல் சம்பவத்தின் போது, துண்டிக்கப்பட்ட காவல்துறை அதிகாரியின் வலது கையை மீண்டும் இணைக்கும் எட்டு மணி நேர அறுவைச் சிகிச்சையில் முக்கியப் பங்காற்றியதன் மூலம் இவர் நாடு முழுவதும் கவனத்தை ஈர்த்துள்ளார். ஆனால், இந்தச் சாதனைக்குப் பின்னால் பல ஆண்டுகால மருத்துவக் கல்வி, சிறப்புப் பயிற்சி, அனைத்துலக அனுபவம், ஆராய்ச்சிப் பங்களிப்பு ஆகியவை அடங்கியுள்ளன.

டாக்டர் அலன் ரவி ராஜகோபால் தனது மருத்துவக் கல்வியை மலாக்கா மணிப்பால் மருத்துவக் கல்லூரியில் தொடங்கி, மலேசிய அறிவியல் பல்கலைக்கழகத்தில் எலும்பியல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றார். MBBS (MAHE), MMed (Orthopaedics)(USM) ஆகியவை அவரது அதிகாரப்பூர்வ மருத்துவத் தகுதிகளாகப் பதிவாகியுள்ளன. இதனுடன் தொழில்சார் மருத்துவத் தகுதியான CMIA (NIOSH) சான்றிதழையும் பெற்றுள்ளார்.

பொது எலும்பியல் மருத்துவத்தில் பெற்ற அடித்தளத்தைத் தொடர்ந்து, மனிதக் கையின் சிக்கலான அமைப்புகளுக்குச் சிகிச்சையளிக்கும் துறையில் அவர் சிறப்புக் கவனம் செலுத்தினார். மலேசிய சுகாதார அமைச்சின் கீழ் மேல் கை உறுப்புகள் மற்றும் நுண் அறுவைச் சிகிச்சையில் சிறப்புப் பயிற்சியைப் பெற்றார்.

அவரது மருத்துவப் பயணத்தில் அனைத்துலக அனுபவம் குறிப்பிடத்தக்கது. ஜப்பானில் கை அறுவைச் சிகிச்சை, நுண் அறுவைச் சிகிச்சை மற்றும் பிராக்கியல் பிளெக்ஸஸ் எனப்படும் தோள்பட்டையிலிருந்து கைக்குச் செல்லும் முக்கிய நரம்புக் கட்டமைப்புக்கான அறுவைச் சிகிச்சையில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார்.



தொடர்ந்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அமைந்துள்ள புகழ்பெற்ற Institut de la Main மருத்துவ நிலையத்திலும் கை அறுவைச் சிகிச்சைக்கான மேம்பட்ட பயிற்சியைப் பெற்றுள்ளார். இத்தகைய சர்வதேசப் பயிற்சிகள் சிக்கலான கை மற்றும் நரம்புக் காயங்களை அணுகுவதற்கான அவரது நிபுணத்துவத்தை மேம்படுத்தியுள்ளன.

மருத்துவச் சேவையில் அவர் கொண்டுள்ள ஈடுபாடு அறுவைச் சிகிச்சை அறையுடன் மட்டும் நின்றுவிடவில்லை. மலேசியாவின் பல்வேறு மருத்துவமனைகளில் பணியாற்றிய அனுபவத்துடன், சபா மாநிலத்தின் சண்டகான் நகரிலுள்ள டச்சஸ் ஆஃப் கென்ட் மருத்துவமனையில் எலும்பியல் துறைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

தற்போது கோலாலம்பூர் பொது மருத்துவமனையின் கை மற்றும் நுண் அறுவைச் சிகிச்சைப் பிரிவில் நிபுணராகப் பணியாற்றுவதுடன், பிரின்ஸ் கோர்ட் மருத்துவ மையத்தில் ஆலோசனை எலும்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணராகவும், செட்டாபாக் கொலம்பியா ஆசியா மருத்துவமனையில் வருகைதரும் ஆலோசனை நிபுணராகவும் சேவையாற்றுகிறார்.

அவரது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் மருத்துவ ஆராய்ச்சியில் கொண்டுள்ள ஈடுபாடாகும். 2025ஆம் ஆண்டு வெளியான ஆய்வுக் கட்டுரை ஒன்றில் முதன்மை ஆசிரியராகப் பங்களித்துள்ளார். செலாயாங் மருத்துவமனையில் 2022 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் மணிக்கட்டுக்கு அருகிலுள்ள எலும்பு முறிவுகளால் பாதிக்கப்பட்ட 446 நோயாளிகளின் 450 எலும்பு முறிவுகள் இந்த ஆய்வில் ஆராயப்பட்டன. நோயாளிகளின் வயது, காயங்களின் தன்மை, சிகிச்சை முறைகள் போன்றவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மருத்துவச் சேவையுடன் ஆராய்ச்சியையும் இணைத்துச் செயல்படுவது அவரது தொழில்முறைப் பயணத்தின் முக்கிய அம்சமாகும்.

இத்தகைய பின்னணியைக் கொண்ட மருத்துவரின் நிபுணத்துவம் அண்மையில் ஒரு அவசர மருத்துவச் சூழலில் வெளிப்பட்டது. 2026 நவம்பர் 11ஆம் தேதி சிலாங்கூர் மாநிலத்தின் கெப்போங், டேசா அமான்புரி பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 26 வயதான காவல்துறை அதிகாரி லான்ஸ் கோப்ரல் தியரி ரோட்ஜர் அனாக் பெண்டியின் வலது மணிக்கட்டுப் பகுதி துண்டிக்கப்பட்டது. தலையிலும் காயமடைந்த அவர் கோலாலம்பூர் பொது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

டாக்டர் அலன் ரவி ராஜகோபால் மற்றும் டாக்டர் அஸீஸ் சப்பீர் ஹுசைன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் சுமார் எட்டு மணி நேரம் நீடித்த அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டனர். அறுவைச் சிகிச்சை நுண்ணோக்கியின் உதவியுடன் பாதிக்கப்பட்ட இரத்த நாளங்கள் மற்றும் நரம்புக் கட்டமைப்புகளை மீண்டும் இணைத்து, கையின் இயல்பான உடற்கட்டமைப்பைச் சீரமைக்கும் பணியை மேற்கொண்டனர்.

சுகாதார அமைச்சர் டாக்டர் ஸுல்கெப்லி அஹ்மத் இந்தச் சிகிச்சையில் ஈடுபட்ட மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களைப் பாராட்டியுள்ளார். அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் காவல்துறை அதிகாரி சில விரல்களை அசைக்க முடிந்ததாகவும் செய்திகள் வெளியாகின. இது ஆரம்பகட்ட முன்னேற்றமாகும்; முழுமையான இயக்கம் மீள்வதற்குத் தொடர் சிகிச்சை அவசியம்.

இந்தச் சாதனையை ஒரே ஒரு மருத்துவரின் வெற்றியாகப் பார்ப்பதைவிட, பல்வேறு மருத்துவப் பிரிவுகள் இணைந்து செயல்பட்டதன் விளைவாகப் பார்ப்பதே பொருத்தமானது. இருந்தாலும், இத்தகைய சிக்கலான அறுவைச் சிகிச்சையில் டாக்டர் அலன் ரவி ராஜகோபால் ஆற்றிய முக்கியப் பங்களிப்பு அவரது மருத்துவ நிபுணத்துவத்தின் மீது பொதுமக்களின் கவனத்தைத் திருப்பியுள்ளது.

மருத்துவப் பட்டம், மேற்படிப்பு, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் பெற்ற சிறப்புப் பயிற்சி, மருத்துவமனைப் பணியனுபவம், ஆய்வுப் பங்களிப்பு எனப் பல்வேறு கட்டங்களைக் கடந்து வந்துள்ள அவரது பயணம், மருத்துவத் துறையில் தொடர்ந்து கற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

ஒரு மருத்துவரின் உண்மையான பங்களிப்பு அவர் பெற்ற பட்டங்களால் மட்டுமல்ல; அவரது அறிவு எத்தனை பேரின் வாழ்க்கையில் நம்பிக்கையை உருவாக்குகிறது என்பதாலும் அளவிடப்படுகிறது.

துண்டிக்கப்பட்ட கையை மீண்டும் இணைத்த அந்த எட்டு மணி நேர அறுவைச் சிகிச்சைக்குப் பின்னால், பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட மருத்துவ அறிவும் அனுபவமும் அர்ப்பணிப்பும் இருக்கின்றன. டாக்டர் அலன் ரவி ராஜகோபாலின் மருத்துவப் பயணம் அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு!

பசுமைப் புரட்சியின் பத்தாண்டுப் பயணம்:

மின்சார வாகனங்களின் கோட்டையாக மாறுமா மலேசியா



மலேசியாவின் சாலைகளில் இன்று ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களின் இரைச்சலும் புகையும், அடுத்த பத்து ஆண்டுகளில் முற்றிலுமாக மாறிப்போவதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. தேசிய எரிசக்தி மாற்றத் திட்டம் மற்றும் குறைந்த கரியமில போக்குவரத்துத் திட்டத்தின் கீழ், 2030-ஆம் ஆண்டிற்குள் நாட்டின் மொத்த வாகன விற்பனையில் 15 முதல் 20 விழுக்காடு மின்சார வாகனங்களாக இருக்க வேண்டும் என்ற இலக்கை மலேசிய அரசாங்கம் நிர்ணயித்துள்ளது.



கடந்த சில ஆண்டுகளில் மலேசியாவில் மின்சார வாகனங்களின் வளர்ச்சி அசுர வேகத்தில் உள்ளது. 2021-ஆம் ஆண்டில் வெறும் நூற்றுக்கணக்கில் இருந்த மின்சார வாகனப் பதிவுகள், 2025-ஆம் ஆண்டில் நாற்பத்து நான்காயிரத்தைத் தாண்டியது. தொடர்ந்து 2026-ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களிலேயே ஐம்பத்தெட்டாயிரத்திற்கும் அதிகமான புதிய மின்சார வாகனங்கள் சாலைகளில் இறங்கியுள்ளன.

இந்த வளர்ச்சிக்கு உள்நாட்டு வாகன நிறுவனங்களின் பங்களிப்பு மிக முக்கியமான காரணமாக மாறியுள்ளது. புரோட்டான் நிறுவனத்தின் மின்சார வாகனங்களான இ-மாஸ் வகை மாதிரிகள் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

2026-ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மலேசியாவில் விற்பனையான மின்சார வாகனங்களில் அறுபது விழுக்காட்டிற்கும் அதிகமான சந்தையைப் புரோட்டான் நிறுவனம் தன்வசப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அடுத்த பத்து ஆண்டுகளில், அதாவது 2036-ஆம் ஆண்டை நோக்கி நாம் பயணிக்கும்போது, மின்சார வாகனங்களின் விலை சாமானிய மக்களும் வாங்கக்கூடிய அளவிற்குக் குறையும். வெளிநாடுகளிலிருந்து முழுமையாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான வரிச் சலுகைகள் முடிவுக்கு வந்துள்ள நிலையில், உள்நாட்டிலேயே மின்சார வாகனங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு 2027-ஆம் ஆண்டு இறுதி வரை முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, புரோட்டான் மற்றும் பெரோடுவா ஆகிய உள்நாட்டு நிறுவனங்களுடன் இணைந்து சீனா மற்றும் ஐரோப்பிய நிறுவனங்கள் மலேசியாவிலேயே தொழிற்சாலைகளை அமைத்து வருகின்றன. அடுத்த ஐந்து முதல் பத்து ஆண்டுகளில், ஒரு லட்சம் ரிங்கிட்டிற்கும் குறைவான விலையில் தரமான மின்சார வாகனங்கள் மலேசியச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கும் சூழல் உருவாகும்.

மின்சார வாகனங்களின் பயன்பாட்டைத் தீர்மானிக்கும் மிக முக்கியக் காரணியாக மின்னேற்ற நிலையங்களின் எண்ணிக்கை உள்ளது. 2026-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத நிலவரப்படி நாடு முழுவதும் ஏழாயிரத்து முந்நூற்று நாற்பத்தொரு பொது மின்னேற்ற நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை 2030-ஆம் ஆண்டிற்குள் முப்பதாயிரமாக உயர்த்த முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

அடுத்த பத்தாண்டுகளில் நெடுஞ்சாலைகளில் மட்டுமின்றி, கிராமப்புறங்கள் மற்றும் சிறு நகரங்களிலும் அதிவேக மின்னேற்ற நிலையங்கள் பரவலாக அமைக்கப்படும். மேலும், அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் தங்கள் வாகனங்களை எளிதாக மின்னேற்றம் செய்வதற்கான புதிய சட்ட விதிமுறைகளும் நடைமுறைக்கு வரும்.

தொழில்நுட்ப ரீதியாகப் பார்த்தால், அடுத்த பத்து ஆண்டுகளில் மின்கலன்களின் திறன் பல மடங்கு அதிகரிக்கும். வெறும் பத்து முதல் பதினைந்து நிமிடங்களில் முழுமையாக மின்னேற்றம் செய்து, ஒரே பயணத்தில் எண்ணூறு முதல் ஆயிரம் கிலோமீட்டர் வரை செல்லக்கூடிய நவீன மின்கலன்கள் பயன்பாட்டிற்கு வரும். இதன் மூலம் நீண்ட தூரப் பயணத்தின் போது மின்சாரம் தீர்ந்துவிடுமோ என்ற அச்சம் முழுமையாக நீங்கும்.

மேலும், பயன்படுத்தப்பட்ட பழைய மின்சார வாகன மின்கலன்களை வீணாக்காமல், கிராமப்புறங்கள் மற்றும் மருத்துவ நிலையங்களுக்குத் தடையற்ற மின்சாரம் வழங்கும் சேமிப்புக் கலன்களாக மறுசுழற்சி செய்யும் திட்டத்தையும் மலேசியா முன்னெடுத்துள்ளது. இது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குப் பெரும் வலுசேர்க்கும்.

இருப்பினும், மானிய விலையில் கிடைக்கும் பெட்ரோல் மற்றும் துணை மின்நிலையங்களின் திறனை விரிவுபடுத்துவதற்கான அதிகப்படியான செலவுகள் ஆகியவை இந்த மாற்றத்திற்குச் சில சவால்களாக உள்ளன. இந்தச் சவால்களைத் தாண்டி, 2036-ஆம் ஆண்டில் மலேசியாவின் நகர்ப்புறச் சாலைகளில் ஓடும் ஒவ்வொரு மூன்று வாகனங்களில் ஒன்று மின்சார வாகனமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.









2027-இல் மனிதர்களுக்கு

‘அதிசய ஆற்றல்’?

► பாபா வாங்காவின் அதிர்ச்சி கணிப்புகள் ◄

உலக வரலாற்றில் நிகழ்ந்த பல முக்கியச் சம்பவங்களைத் தனது ஞானக் கண்களால் முன்கூட்டியே கணித்துக் கூறியவர் பல்கேரியாவைச் சேர்ந்த பார்வையற்ற பெண்மணி பாபா வாங்கா. 1911-ஆம் ஆண்டு பிறந்த இவரது இயற்பெயர் வாங்கெலியா பாண்டேவா குஷ்டெரோவா. தனது 12-ஆவது வயதில் ஏற்பட்ட ஒரு பயங்கரப் புயலில் சிக்கிப் பார்வையை இழந்த பிறகு, எதிர்காலத்தைத் துல்லியமாகக் கணிக்கும் ஆற்றல் தனக்குக் கிடைத்ததாக இவர் கூறினார்.

1996-ஆம் ஆண்டு இவர் மறைந்தாலும், 5079-ஆம் ஆண்டு வரையிலான உலக நிகழ்வுகளை இவர் கணித்து வைத்துள்ளதாக நம்பப்படுகிறது. ’பால்கன் பகுதிகளின் நாஸ்ட்ராடாமஸ்’ என்று அழைக்கப்படும் பாபா வாங்கா, எதிர்வரும் 2027-ஆம் ஆண்டு எப்படி இருக்கும் என்பது குறித்துக் கூறியுள்ள தகவல்கள் உலக மக்களிடையே பெரும் வியப்பையும் விவாதத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இது குறித்துப் பிரிட்டனின் பிரபல டெய்லி மெயில் மற்றும் ஸ்கை ஹிஸ்டரி ஆகிய ஊடகங்கள் விரிவான செய்திகளை வெளியிட்டுள்ளன.

2027-ஆம் ஆண்டிற்கான பாபா வாங்காவின் கணிப்புகளில் மிகவும் விசித்திரமானது மற்றும் அறிவியல் புனைகதை போலத் தோன்றுவது மனிதர்களின் பரிணாம வளர்ச்சி குறித்ததாகும். அந்த ஆண்டில் உலகளவில் பரவும் ஒரு மர்மமான நோய் அல்லது மரபணுப் பரிசோதனை காரணமாக, மக்கள் தொகையில் ஒரு பகுதியினர் பாதிக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. அதன் விளைவாக, சில மனிதர்களுக்குச் சாதாரண மனித சக்திக்கு அப்பாற்பட்ட ’அதிசய ஆற்றல்’ எனப்படும் அசாதாரண சக்திகள் கிடைக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றம் மனிதகுலத்தை நிரந்தரமாக இரு பிரிவுகளாகப் பிரிக்கும் என்று கூறப்படுகிறது. இருப்பினும், அந்த அசாதாரண சக்திகள் சமூகத்திற்கு நன்மையா அல்லது ஆபத்தா என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை எனச் சர்வதேசச் செய்தி ஊடகமான வியோன் தனது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதார ரீதியாகப் பார்த்தால், 2027-ஆம் ஆண்டில் உலகளாவிய பண நெருக்கடி ஏற்படும் என்று பாபா வாங்கா எச்சரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. பாரம்பரிய வங்கி முறைகளில் ஏற்படும் தடுமாற்றம் காரணமாக, முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடான தங்கத்தை நோக்கிப் படையெடுப்பார்கள். இதன் விளைவாக, 2027-இல் தங்கத்தின் விலை 25 முதல் 40 விழுக்காடு வரை கடுமையாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக இந்தியா நியூஸ் நெட்வொர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும், மின்னணுச் சாதனங்களில் தங்கத்தின் பயன்பாடு அதிகரிப்பதும் இந்த விலையேற்றத்திற்குத் துணைபுரியும் எனப் பிரிட்டனின் யூனிலேட் ஊடகம் தெரிவித்துள்ளது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் 2027 ஒரு திருப்புமுனை ஆண்டாக அமையும் என்றும் பாபா வாங்கா கணித்துள்ளார். 2028-ஆம் ஆண்டில் மனிதகுலம் ஒரு புதிய ஆற்றல் மூலத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தும் என்று அவர் கூறியுள்ளார். அதற்கான முக்கிய ஆராய்ச்சிகளும் சோதனைகளும் 2027-ஆம் ஆண்டில் தீவிரமாக நடைபெறும் என இ.ஏ. டெய்லி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, கரியமில வாயு வெளியேற்றம் இல்லாத அணுக்கரு இணைவு போன்ற நவீன எரிசக்தித் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானிகள் மாபெரும் வெற்றியைப் பெறுவார்கள் என்று நம்பப்படுகிறது. இது தவிர, ரஷ்ய அரசியலில் மிகப்பெரிய தலைமை மாற்றம் நிகழ்ந்து, உக்ரைன் போர்ச் சூழலில் புதிய அமைதி ஒப்பந்தங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் இருப்பதாக ஸ்கை ஹிஸ்டரி கட்டுரை விவரிக்கிறது.

பாபா வாங்கா தனது கணிப்புகளை எழுத்துப்பூர்வமாக ஆவணப்படுத்தவில்லை என்பதால், சமூக வலைதளங்களில் பரவும் பல தகவல்களுக்கு அதிகாரப்பூர்வ ஆவண ஆதாரங்கள் இல்லை என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். இதனை அனைத்துச் சர்வதேச ஊடகங்களும் ஒருமித்த கருத்தாகத் தெரிவித்துள்ளன.

இருப்பினும், 2001 இரட்டைக் கோபுரத் தாக்குதல், சுனாமி மற்றும் உலகளாவிய பெருந்தொற்று ஆகியவற்றை இவர் முன்கூட்டியே கணித்ததாகப் பின்பற்றுபவர்கள் உறுதியாக நம்புகின்றனர். இதன் காரணமாகவே, 2027-ஆம் ஆண்டிற்கான இந்தக் கணிப்புகளும் உலக அரங்கில் அதிக கவனத்தைப் பெற்றுள்ளன.



கேமரன்மலையின் அழியாத அடையாளம்: ‘மெர்லின்’ விடுதி





நாட்டில் குளிர் பிரதேசமான கேமரன்மலையின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒரு புகழ்பெற்ற அடையாளம் பழைய ‘மெர்லின்’ தங்கும் விடுதியாகும். தானா ராத்தாவிலிருந்து பிரிஞ்சாங் செல்லும் பிரதான சாலையில், பசுமையான குழிப்பந்தாட்ட மைதானத்தைப் பார்த்தவாறு அமைந்துள்ள இந்த விடுதி பல தசாப்த கால வரலாற்றைக் கொண்டது.

1930 களில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக் காலத்தில், மரத்தாலான கட்டடமாக ‘கேமரன்மலை விடுதி’ என்ற பெயரில் இது தொடங்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் அந்தப் பழைய மரக் கட்டடம் சேதமடைந்ததைத் தொடர்ந்து, மெர்லின் குழுமத்தால் புதிதாகக் கட்டப்பட்டு ‘மெர்லின் விடுதி’ என்ற பெயரில் புகழ்பெற்றது.

பழமையான ஆங்கிலேயக் கட்டடக்கலை பாணியில் அமைக்கப்பட்ட இதன் தோற்றம், கேமரன்மலையின் குளிருக்கு ஏற்ற ஒரு பாரம்பரிய மாளிகையைப் போன்ற உணர்வைத் தந்தது. நவீன நீச்சல் குளங்கள் இல்லாவிட்டாலும், கட்டடத்தின் உட்புறத்தில் இருந்த உறுதியான மரக் கற்றைகளும், அமைதியான சூழலும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்தன. குறிப்பாக, இரவு நேரங்களில் மலரும் பூக்களின் நறுமணமும், விடுதிக்கு முன்பாகக் கம்பீரமாக நின்ற பிரம்மாண்ட தைல மரமும் இங்குத் தங்கியவர்களின் மனதில் நீங்காத நினைவுகளாகப் பதிந்தன. ஜப்பானியச் சுற்றுலாப் பயணிகளும், குழிப்பந்தாட்ட விரும்பிகளும் இந்த விடுதியின் நிரந்தர வாடிக்கையாளர்களாக இருந்தனர்.

இந்த விடுதியின் சிறப்பம்சமாகத் திகழ்ந்தது அங்குப் பணியாற்றிய ஊழியர்களின் அன்பும் மரியாதையும்தான். இருபத்தைந்து முதல் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அங்குப் பணியாற்றிய முதிய ஊழியர்கள், இந்த விடுதியைத் தங்களது சொந்த வீடாகவே கருதி விருந்தினர்களை உபசரித்தனர்.





2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மெர்லின் விடுதி தனது செயல்பாட்டை நிறுத்திக்கொண்டபோது, பல ஆண்டுகளாக அங்குப் பணியாற்றிய ஊழியர்களும், பழைய வாடிக்கையாளர்களும் கண்ணீருடன் விடைகொடுத்தனர். பின்னர், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விடுதியை மலேசியாவின் பிரபல நிறுவனக் குழுமம் ஒன்று வாங்கிப் புதுப்பித்தது.

2006 ஆம் ஆண்டில் ‘கேமரன்மலை உல்லாச விடுதி’ என்ற புதிய பெயருடன் ஐந்து நட்சத்திர ஆடம்பர விடுதியாக இது உருவெடுத்தது. பழைய காலனித்துவ அழகும் கட்டடக்கலையும் சிதையாமல் பாதுகாக்கப்பட்டு, இன்று உலகின் மிகச்சிறந்த பாரம்பரிய ஆடம்பர விடுதிகளில் ஒன்றாக இது திகழ்கிறது.

காலங்கள் மாறிப் பெயர் மாற்றம் பெற்றாலும், கேமரன்மலையின் பசுமை வரலாற்றில் ‘மெர்லின்’ விடுதி பதித்த தடம் என்றும் அழியாத ஒன்றாகும்.





தாயகம் திரும்பிய அகதிகள்:

எதிர்காலத்தைத் தொலைத்த சோகம்

2021-ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்தபோது, உயிருக்குப் பயந்து தனது பெற்றோர் மற்றும் உடன்பிறப்புகளுடன் ஈரானுக்குத் தப்பிச் சென்றவர் முகமது சயீத். அப்போது அவருக்கு வயது 18. ஆனால் இன்று, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான மோதலால் ஈரானில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பிக்க, சயீத் மற்றும் அவரது குடும்பத்தினர் உட்பட ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் மீண்டும் தாயகத்திற்கே திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஈரானிய நாணயமான ரியாலின் மதிப்பு கடுமையாகச் சரிந்ததால், குடும்பத்தின் சேமிப்பில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமான தொகையை இழந்து வெறுங்கையுடனேயே நாடு திரும்பியதாக சயீத் வேதனையுடன் கூறுகிறார்.

பல தசாப்தங்களாக வறுமையிலிருந்தும், தாலிபான் ஆட்சியிலிருந்தும் தப்பி வருபவர்களுக்கு ஈரானின் தொழில்மயமாக்கப்பட்ட பொருளாதாரம் புகலிடமாக இருந்தது. ஆனால் இப்போது, பெண்களின் கல்வி, பயணம் மற்றும் வேலைவாய்ப்புக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

புழுதி படிந்த இஸ்லாம் காலா எல்லைப் பகுதியில், தாயகம் திரும்பும் அகதிகள் ஆவணச் சரிபார்ப்பு மற்றும் பதிவுகளுக்காக வரிசையில் காத்திருக்கின்றனர். தற்காலிகக் கப்பல் கொள்கலன் அலுவலகங்களுக்கு அப்பால், வறண்ட பாலைவன மலைகளும், மேற்கு ஆப்கானிஸ்தானின் மிகப்பெரிய நகரமான ஹெராத்திற்குச் செல்லும் குண்டும் குழியுமான நெடுஞ்சாலையும் நீள்கின்றன. ஈரானை விட்டு வெளியேறுவதற்கு முன்பு பல மாதங்களாக வேலையின்றித் தவித்ததாகவும், கட்டுக்கடங்காத பணவீக்கத்தால் நசுக்கப்பட்டதாகவும் பெரும்பாலானோர் தெரிவிக்கின்றனர்.

கடுமையாக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளும், அமெரிக்கக் கடற்படை முற்றுகையும் ஈரானின் பொருளாதாரச் சிக்கலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. ஹோர்முஸ் நீரிணை வழியாக ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஈரானியப் புள்ளியியல் மையத்தின் தகவல்படி, பயனீட்டாளர் விலைகள் ஆண்டுக்கு சுமார் 90 விழுக்காடு உயர்ந்துள்ளன. உணவுப் பணவீக்கம் கிட்டத்தட்ட 130 விழுக்காட்டை எட்டியுள்ளதால் ரொட்டி, பால் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் எட்டாக்கனியாகிவிட்டன.

ஈரானியர்களும் ஆப்கானியர்களும் தங்கள் சேமிப்பை இழந்து வரும் நிலையில், தினக்கூலி வேலை மட்டுமே எஞ்சியிருப்பதாக 40 வயதான சயீத் ஜாவேத் காசி கானி கூறுகிறார். பன்னாட்டு இடம்பெயர்வு அமைப்பின் தரவுகளின்படி, ஈரானிலிருந்து திரும்பிய ஆப்கானியர்களில் வெறும் 29 விழுக்காட்டினர் மட்டுமே தங்களிடம் சிறிதளவேனும் சேமிப்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான ஆப்கானியர்கள் ஈரானை விட்டு வெளியேறியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ஈரானிய அதிகாரிகளால் கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டவர்கள். ஆனால் தற்போது, பெண்களும் ஒட்டுமொத்தக் குடும்பங்களும் அதிகளவில் நாடு திரும்பத் தொடங்கியுள்ளனர்.

தாலிபான் ஆட்சிக்குப் பிறகு ஈரானில் தங்கியிருந்த ஆப்கானியத் தாய்மார்கள் மற்றும் மகள்களுக்கு, தற்போதைய பொருளாதார நெருக்கடி ஒரு இக்கட்டான சூழலை உருவாக்கியுள்ளது. ஈரானில் வறுமையில் வாடுவதா அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைப்படி பாதிப் பெண்கள் மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை மட்டுமே வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படும் நாட்டிற்குத் திரும்புவதா என்ற கேள்வியே அவர்கள் முன் உள்ளது. ஆண் துணை இன்றிப் பெண்கள் பயணம் செய்வதற்கும், பல தொழில்களில் ஈடுபடுவதற்கும் தாலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

44 வயதான அப்துல் ஜப்பார், தனது மனைவி, இரண்டு மகள்கள், பேரன் மற்றும் தாயாரை மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கு அழைத்து வர ஒருபோதும் விரும்பியதில்லை. கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களாக ஈரானில் வசித்து வந்த அவரது குடும்பம், கெர்மான் நகரில் உள்ள ஈரானிய ராணுவத் தளத்திற்கு அருகே வசதியான வாழ்க்கையை வாழ்ந்து வந்தது. ‘‘ஆப்கானிஸ்தான் இரண்டு தெருக்கள் தள்ளி இருந்தால்கூட நான் அங்குச் செல்ல மாட்டேன் என்று முன்பு கூறுவேன்’’ என்கிறார் ஜப்பார். ஆனால், அருகிலுள்ள ராணுவத் தளம் மீது நடத்தப்பட்ட தொடர் ஏவுகணைத் தாக்குதல்களும், கட்டுமானத் தொழில் முடங்கியதும் அவரை வேறு வழியின்றி நாடு திரும்ப வைத்தது.

அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து தப்பித்து நாடு திரும்பினால் உதவி செய்வதாக உறவினர்கள் உறுதியளித்திருந்தனர். ஆனால், சேமிப்போ உடைமைகளோ இன்றி வந்த அவருக்கு, இரண்டு மாதங்களுக்குப் பிறகும் வேலை கிடைக்கவில்லை.

உறவினர்களிடம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தவிக்கும் அவரது குடும்பம், தற்போது மின்சாரத்திற்குச் சூரிய ஒளித் தகடுகளை மட்டுமே நம்பியிருக்கும் ஒரு புழுக்கமான மண் வீட்டில் வசிக்கிறது. ஆடை வடிவமைப்பாளராகக் கனவு காணும் அவரது 15 வயது மகள் செதாயேஷ், ‘‘முடிந்தால் நான் மீண்டும் ஈரானுக்கே திரும்பிச் செல்வேன். எனது கல்விக்காகவும், தோழிகளுக்காகவும் செல்ல விரும்புகிறேன்’’ என்று ஏக்கத்துடன் கூறுகிறார்.

நாள்தோறும் பெண்கள் மற்றும் சிறுமிகள் உட்பட 20 முதல் 40 குடும்பங்கள் தாமாக முன்வந்து திரும்புவதாக மூத்த தாலிபான் அதிகாரி அப்துல் கானி காசிசாதே கூறுகிறார். ஈரானில் கிடைக்கும் கூலி அடிப்படை வாழ்க்கைச் செலவுகளுக்கே போதவில்லை என்றும், முதலாளிகள் சம்பளத்தை நிறுத்தி வைப்பதாகவும் அகதிகள் புகார் கூறுவதாக அவர் தெரிவித்தார்.



2021-ல் ஈரானுக்குச் சென்ற சயீத் மற்றும் அவரது தாயார் ரெஸ்வானா ஜாமி ஆகியோர், அங்கு பீட்சா பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிலைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தி வந்தனர். ஆனால், அமெரிக்கா-ஈரான் பதற்றம் அதிகரித்து மூலப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால், ஐந்து மாதங்களுக்கு முன்பு அவர்கள் ஆப்கானிஸ்தான் திரும்பினர். எஞ்சியிருந்த சேமிப்பைக் கொண்டு சமையலறை உபகரணங்களை வாங்கி, மீண்டும் பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழிலைத் தொடங்கியுள்ளனர்.

ஆனால், ஜாமியின் 17 வயது மகளுக்குத் தாயகம் திரும்பியது தனது கல்வியை இழந்ததைப் போன்ற உணர்வைத் தந்துள்ளது. ‘‘அம்மா, நான் எட்டு ஆண்டுகள் படித்தேன்; ஆனால் இப்போது வீட்டிலேயே முடங்கிக் கிடக்கிறேன் என்று அவள் என்னிடம் சொல்லிக்கொண்டே இருக்கிறாள். பொறுமையாக இரு, கடவுள் கருணையுள்ளவர் என்று ஆறுதல் கூறுவதைத் தவிர என்னால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை’’ என்கிறார் ஜாமி.



வேர்களைத் தேடும் பயணம்:

பினாங்கின் மறைந்துவரும் மரபுகளை மீட்டெடுக்கும் கிறிஸ் ஓங்

பினாங்கின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஜார்ஜ் டவுன் நகரம், உலகப் பாரம்பரியத் தலமாக அறிவிக்கப்பட்ட பிறகு உலகளாவிய கவனத்தைப் பெற்றுள்ளது. இங்குள்ள பழமையான கட்டிடங்களும், கலைநயம் மிக்க விடுதிகளும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்கின்றன. ஆனால், இந்தப் பழமையான சுவர்களுக்குப் பின்னால் இருந்த உயிரோட்டமான வாழ்வியல் சடங்குகளும், தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்ட மரபுகளும் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. கட்டிடங்களைப் புதுப்பித்துவிடலாம்; ஆனால், ஒரு சமூகத்தின் ஆன்மாவாக விளங்கும் வாய்மொழி வரலாறுகளையும் சடங்குகளையும் பாதுகாக்காவிட்டால், அவை ஒரு தலைமுறைக்குள் முற்றிலுமாக அழிந்துவிடும்.

இந்த அபாயத்தை உணர்ந்து, பினாங்கின் மறைந்துவரும் மரபுகளை ஆவணப்படுத்தும் உன்னதப் பணியில் இறங்கியுள்ளார் விடுதி உரிமையாளரும் பாரம்பரிய ஆர்வலருமான கிறிஸ் ஓங்.

பினாங்கின் ஐந்தாம் தலைமுறை பெரானகன் பாபா வம்சாவளியைச் சேர்ந்த கிறிஸ் ஓங், சுமார் முப்பது ஆண்டுகள் ஆஸ்திரேலியா மற்றும் இலங்கையில் வங்கித் துறை மற்றும் விடுதித் துறையில் பணியாற்றிய பிறகு தனது சொந்த மண்ணுக்குத் திரும்பினார்.

ஜார்ஜ் டவுனில் உள்ள சிதிலமடைந்த பழைய கட்டிடங்களை மீட்டெடுத்து, அவற்றை 'ஏழு மாடிகள்' எனப் பொருள்படும் 'செவன் டெரஸஸ்' போன்ற உலகத் தரம் வாய்ந்த பாரம்பரிய விடுதிகளாக மாற்றிய பெருமை இவருக்கு உண்டு. கட்டிடக்கலையை மீட்டெடுப்பதில் வெற்றி கண்ட போதிலும், நகரத்தின் அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்த கூட்டுச் சடங்குகளும், ஆன்மீக நம்பிக்கைகளும் நவீன வாழ்க்கை முறையால் சிதைந்து வருவதைக் கண்டு அவர் ஆழ்ந்த கவலை கொண்டார்.

கட்டிடங்களும் கலைப்பொருட்களும் கண்களுக்குத் தெரியும் பருப்பொருள் பாரம்பரியங்கள். ஆனால், சடங்குகளும் பழக்கவழக்கங்களும் கண்களுக்குத்



தெரியாத அருவமான பாரம்பரியங்கள். நவீனமயமாக்கல், உலகமயமாக்கல் மற்றும் முதியவர்களிடையே ஏற்படும் நினைவாற்றல் இழப்பு ஆகியவற்றால், இந்தப் பொக்கிஷங்கள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படாமலேயே காணாமல் போகும் சூழல் உருவாகியுள்ளது.

இதனைத் தடுக்கும் நோக்கில், தனது சிறுவயது நினைவுகளையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு 'பாரம்பரியச் சடங்குகள்' எனப் பொருள்படும் 'ஹெரிட்டேஜ் ரிச்சுவல்ஸ்' என்ற 108 பக்கங்கள் கொண்ட நூலை கிறிஸ் ஓங் படைத்துள்ளார்.



இந்த நூலில், பினாங்கின் தனித்துவமான கலாச்சாரப் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கும் பல முக்கியச் சடங்குகள் மிக நேர்த்தியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, சீனப் புத்தாண்டிற்கு முன்னதாக வீட்டின் சமையலறைக் கடவுளான 'சாவோ குன்' வழிபாடு, ஹோக்கியன் சமூகத்தினரின் பிரம்மாண்டமான 'பாய் தி காங்' நன்றி செலுத்தும் விழா, முன்னோர்களை நினைவுகூரும் 'செங் பெங்' சடங்கு மற்றும் மலாய்-சீன கலாச்சாரக் கலப்பின் அடையாளமான 'டத்து கொங்' வழிபாடு ஆகியவை குறித்த நுணுக்கமான தகவல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. வெறும் வரலாற்றுக் குறிப்புகளாக இல்லாமல், தனது குடும்பத்தில் நடந்த நிகழ்வுகளைத் தன்மை நடையில் உணர்வுபூர்வமாகப் பதிவு செய்திருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

இன்றைய வேகமான உலகில், மனிதர்கள் தனிமனிதவாதத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். குடும்ப உறவுகளும் சமூகப் பிணைப்புகளும் சுருங்கி வரும் இக்காலகட்டத்தில், இத்தகைய பாரம்பரியச் சடங்குகளே மக்களை ஒன்றிணைக்கும் பாலமாகச் செயல்படுகின்றன என்பதை கிறிஸ் ஓங் அழுத்தமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

சடங்குகள் என்பவை வெறும் மூடநம்பிக்கைகளோ அல்லது சுற்றுலாப் பயணிகளுக்கான காட்சிப் பொருட்களோ அல்ல; அவை ஒரு சமூகத்தின் அடையாளத்தையும், நன்றியுணர்வையும், கூட்டு வாழ்க்கையையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் உயிர்நாடிகள்.

பினாங்கின் வரலாற்றை நேசிப்பவர்களுக்கும், தங்கள் வேர்களைத் தேடும் இளைய தலைமுறையினருக்கும் கிறிஸ் ஓங்கின் இந்த முயற்சி ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது. 'திசைகள்' வாசகர்களுக்கு இந்த நிகழ்வு ஒரு முக்கியமான பாடத்தை உணர்த்துகிறது.

மலேசியாவில் வாழும் தமிழ் சமூகத்திடையேயும் பல அரிய நாட்டார் வழிபாடுகளும், குடும்பச் சடங்குகளும், வாய்மொழி வரலாறுகளும் ஆவணப்படுத்தப்படாமல் மறைந்து வருகின்றன. கிறிஸ் ஓங்கைப் போல, நமது பாரம்பரியக் கூறுகளையும் எழுத்து வடிவிலும் காட்சி வடிவிலும் ஆவணப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.





வானவில் ஏன் ஏழு நிறங்களைக் கொண்டுள்ளது?

மழை பெய்து முடிந்த பிறகு வானத்தில் தோன்றும் அழகான வானவில்லைப் பார்த்து, அது எப்படி உருவாகிறது என்று எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா?

சூரிய ஒளி காற்றில் மிதக்கும் சிறிய நீர்த்துளிகள் வழியாகச் செல்லும்போது வானவில் உருவாகிறது. அப்போது நீர்த்துளிகள் சூரிய ஒளியை வளைத்து, அதிலுள்ள வெவ்வேறு நிறங்களைப் பிரிக்கின்றன. இந்த நிகழ்வு நிறப்பிரிகை (Dispersion) என்று அழைக்கப்படுகிறது நமக்குச் சூரிய ஒளி வெள்ளை நிறமாகத் தெரிந்தாலும், உண்மையில் அதில் பல்வேறு நிறங்கள் அடங்கியுள்ளன!

உங்களுக்குத் தெரியுமா?

உண்மையில் வானவில் ஒரு முழு வட்ட வடிவத்தைக் கொண்டது! ஆனால் நாம் பூமியிலிருந்து பார்க்கும்போது, அடிவானம் அதன் கீழ்ப்பகுதியை மறைப்பதால் வளைவு வடிவில் மட்டுமே வானவில் நமக்குத் தெரிகிறது.

சிறப்புச் சிறுகதை



முயற்சியை ஒருபோதும் கைவிடாதே!

ஒரு சிறிய கிராமத்தில் அருண் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு மரம், செடிகள் வளர்ப்பதில் அதிக ஆர்வம் இருந்தது.

ஒருநாள், அவனது ஆசிரியர் ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு விதையைக் கொடுத்து, அதை நட்டு வளர்க்கும்படி கூறினார்.

அருணும் தனது விதையை ஒரு சிறிய தொட்டியில் நட்டு, தினமும் தண்ணீர் ஊற்றி வந்தான். ஆனால் பல நாட்களாகியும் எந்த மாற்றமும் தெரியவில்லை.

அவனது நண்பர்கள் சிலர், "உன் விதை வளராது போலிருக்கிறது!" என்று கேலி செய்தனர். ஆனால் அருண் நம்பிக்கையை இழக்கவில்லை. தொடர்ந்து தண்ணீர் ஊற்றி, அக்கறையுடன் செடியைப் பராமரித்தான்.

சில நாட்களுக்குப் பிறகு, மண்ணிலிருந்து ஒரு சிறிய பச்சை முளை வெளியே வந்தது. அதைப் பார்த்த அருண் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

காலப்போக்கில், அந்தச் சிறிய முளை அழகான செடியாக வளர்ந்தது.

நீதி: வெற்றி உடனடியாகக் கிடைக்காவிட்டாலும், பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் தொடர்ந்து முயற்சி செய்தால் நிச்சயம் முன்னேறலாம்.

சிந்தித்துப் பதில் சொல்லுங்கள்!

இந்தப் புதிர்களுக்கு சரியான விடைகளைக் கண்டுபிடிக்க முடியுமா?

1. கைகள் உள்ளன, ஆனால் கைதட்ட முடியாது. அது என்ன?
2. கழுத்து உள்ளது, ஆனால் தலை இல்லை. அது என்ன?
3. மற்றவர்களை உலர வைக்கும்போது தானே ஈரமாகிறது. அது என்ன?
4. பல பற்கள் உள்ளன, ஆனால் கடிக்க முடியாது. அது என்ன?
5. எப்போதும் மேலே செல்கிறது; ஒருபோதும் கீழே வருவதில்லை. அது என்ன?

விடைகள்:
1. சட்டை
2. பாட்டில்
3. துண்டு
4. சீப்பு
5. வயது



வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!

கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு படங்களையும் கவனமாகப் பாருங்கள். அவற்றுக்கிடையே மறைந்திருக்கும் 10 வித்தியாசங்களையும் கண்டுபிடியுங்கள்!





விடைகள்:
1. தலையில் சிவப்பு நிற தொப்பி (Boy's cap)
2. சிறுவனின் டீ-சட்டை (Boy's T-shirt)
3. சிறுமியின் தலை அலங்காரம் (Girl's hair accessory)
4. சிறுமியின் கண்கள் (Girl's eyes)
5. சிறுமியின் சாண்ட்விச் (Girl's sandwich)
6. சிறுமியின் கூடை (Picnic basket)
7. தண்ணீர் பாட்டில் (Water bottle)
8. தட்டில் உள்ள பழங்கள் (Fruits on the plate)
9. பூனையின் இருக்கை (Cat's position)
10. பின்னணி நிறம் (Background)

சிறுவர் சவால்: 10 வித்தியாசங்களையும் கண்டுபிடித்தீர்களா? உங்கள் கவனிக்கும் திறனைச் சோதித்துப் பாருங்கள்!



கிழக்கு மேற்கு இணையும் வரலாற்றுப் பயணம்:

டிசம்பர் 12-இல் தொடங்குகிறது ECRL!

சிலாங்கூர் மாநிலத்தின் கோம்பாக் ஒருங்கிணைந்த போக்குவரத்து முனையத்திற்கும் கிளந்தான் மாநிலத்தின் கோத்தா பாருவிற்கும் இடையிலான கிழக்குக் கடற்கரை ரயில் இணைப்பு (ECRL) முதல் கட்டப் பயணிகள் சேவை வரும் 2026 டிசம்பர் 12-ஆம் தேதி அதிகாரப்பூர்வமாகத் தொடங்குகிறது. இதுவரை சாலை வழியாக 7 முதல் 12 மணி நேரம் வரை பிடித்த நீண்ட பயணத்தை இத்திட்டம் வெறும் 4 மணி நேரமாகக் குறைத்து, கிழக்கு மற்றும் மேற்குக் கடற்கரை மக்களிடையே புதியதொரு போக்குவரத்துப் பாலத்தை உருவாக்குகிறது.



இந்தப் பிரம்மாண்ட ரயில் பாதையின் கட்டுமானப் பணிகள் 2017-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பகாங் மாநிலத்தின் குவாந்தானில் அடிக்கல் நாட்டப்பட்டுத் தொடங்கப்பட்டன. 2018-இல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இப்பணிகள், 2019-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மறுசீரமைக்கப்பட்டு புதிய ஒப்பந்தத்தின் கீழ் மீண்டும் வேகமெடுத்தன.

கோத்தா பாரு முதல் கோம்பாக் வரையிலான 523 கிலோமீட்டர் தூரமுள்ள முதல் கட்டப் பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்து, கடந்த 2026 நவம்பர் 7-ஆம் தேதி ரயில் அமைப்பு அதிகாரப்பூர்வமாக ஒப்படைக்கப்பட்டு இறுதிக்கட்ட சோதனை ஓட்டங்கள் தொடங்கப்பட்டன.

கோம்பாக் முதல் சிலாங்கூரின் கிள்ளான் துறைமுகம் வரையிலான இரண்டாம் கட்டப் பணிகள் 2027 டிசம்பரில் நிறைவடைந்து, 2028 ஜனவரியில் முழுமையான சேவை தொடங்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிள்ளான் துறைமுகம் முதல் கோத்தா பாரு வரையிலான முழுத் திட்டத்தின் மொத்த நீளம் 665 கிலோமீட்டர் ஆகும். இதில் தற்போது டிசம்பர் 12-ஆம் தேதி தொடங்கும் முதல் கட்டப் பாதையின் நீளம் 523 கிலோமீட்டராகும். நவீனத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள பயணிகள் ரயில்கள் மணிக்கு அதிகபட்சம் 160 கிலோமீட்டர் வேகத்திலும், சரக்கு ரயில்கள் மணிக்கு 80 கிலோமீட்டர் வேகத்திலும் இயங்கும் திறன் கொண்டவை.

கரடுமுரடான மலைப்பாங்கான பகுதிகளைக் கடக்கவும், இயற்கைச் சூழலைப் பாதுகாக்கவும் முழுப் பாதையிலும் சுமார் 69 கிலோமீட்டர் நீளத்திற்கு மொத்தம் 41 சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, தித்திவாங்சா மலைத்தொடரைக் குடைந்து அமைக்கப்பட்ட 16.39 கிலோமீட்டர் நீளமுள்ள இரட்டைத் துளை கெந்திங் சுரங்கப்பாதை தென்கிழக்கு ஆசியாவின் மிக நீளமான ரயில் சுரங்கப்பாதை என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், நிரந்தர வனக் காப்பகங்களை ரத்து செய்யாமல் வனத்துறையின் சிறப்பு அனுமதியுடன் மட்டுமே கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. திரெங்கானுவின் புக்கிட் பாவ் வனப்பகுதியில் சுமார் 150 ஹெக்டேர் பரப்பளவும், சிலாங்கூரின் வடக்கு கோல லங்காட் வனப்பகுதியில் சுமார் 21.4 ஹெக்டேர் பரப்பளவும் மட்டுமே இதற்காகப் பயன்படுத்தப்பட்டன. காடுகளை அழிப்பதைத் தவிர்க்கப் பல இடங்களில் நீண்ட சுரங்கப்பாதைகளும், வனவிலங்குகள் பாதுகாப்பாகக் கடந்து செல்லத் தனி வழித்தடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

மலேசிய நிதியமைச்சின் கீழ் செயல்படும் மலேசியா ரயில் லிங்க் நிறுவனம் (MRL) இத்திட்டத்தின் முழுமையான உரிமையைக் கொண்டுள்ளது. இதன் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானப் பணிகளைச் சீனாவின் சைனா கம்யூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. ரயில் சேவையை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் இவ்விரு நிறுவனங்களும் இணைந்து சம பங்குதாரர்களாக 'ECRL ஆபரேஷன்' (ECRL Operation Sdn Bhd) என்ற கூட்டு நிறுவனத்தை உருவாக்கியுள்ளன.

இந்த ரயில் கட்டமைப்பு நாள் ஒன்றுக்கு 24 பயணங்களைக் கையாளும் திறன் கொண்டது.

ஆரம்பக்கட்டமாக, திங்கள் முதல் வியாழன் வரை நாள் ஒன்றுக்கு 12 சேவைகளும், வார இறுதி நாட்களான வெள்ளி முதல் ஞாயிறு வரை நாள் ஒன்றுக்கு 16 சேவைகளும் இரு மார்க்கங்களிலும் இயக்கப்படும். அனைத்து நிலையங்களிலும் நின்று செல்லும் சாதாரண ரயில் மற்றும் முக்கிய நிலையங்களில் மட்டும் நின்று செல்லும் விரைவு ரயில் என இரு வகைச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

விரைவு ரயில் மூலம் கோம்பாக்கிலிருந்து கோத்தா பாருவிற்கு 4 மணி நேரத்திலும், சாதாரண ரயில் மூலம் சுமார் 5 மணி நேரத்திலும் சென்றடையலாம். ஆறு பெட்டிகளைக் கொண்ட ஒவ்வொரு ரயிலிலும் ஒரே நேரத்தில் 425 முதல் 435 பயணிகள் வரை வசதியாகப் பயணிக்க முடியும்.







ரயில் நின்று செல்லும் நிலையங்கள்

ECRL ரயில் நின்று செல்லும் நிலையங்கள் (மொத்தம் 16)

கிளந்தான் மாநிலம் (2 நிலையங்கள்):
- கோத்தா பாரு (Kota Bharu)
- பாசிர் பூத்தே (Pasir Puteh)

திரெங்கானு மாநிலம் (6 நிலையங்கள்):
- ஜெர்த்தே (Jerteh)
- பண்டார் பெர்மைசூரி (Bandar Permaisuri)
- கோலா திரெங்கானு (Kuala Terengganu)
- டுங்குன் (Dungun)
- கெமாசிக் (Kemasik)
- சுக்காய் (Chukai)

பகாங் மாநிலம் (7 நிலையங்கள்):
- செராத்திங் (Cherating)
- குவாந்தான் துறைமுக நகரம் (Kuantan Port City)
- கோத்தாசாஸ் (KotaSAS)
- பாயா பெசார் (Paya Besar)
- மாரான் (Maran)
- தெமர்லோ (Temerloh)
- பெந்தோங் (Bentong)

சிலாங்கூர் மாநிலம் (1 நிலையம்):
- கோம்பாக் ஒருங்கிணைந்த போக்குவரத்து முனையம் (ITT Gombak)

ECRL
JOM NAIK ECRL!

குறிப்பு: விரைவு ரயில் சேவை **(Express Service)** கோத்தா பாரு, கோலா திரெங்கானு, கோத்தாசாஸ் மற்றும் கோம்பாக் ஆகிய நான்கு முக்கிய நிலையங்களில் மட்டுமே நின்று செல்லும்.





ECRL ஒரு வழிப் பயணக் கட்டண விவரம்

விமானப் பயணச்சீட்டு முறையைப் போன்று தேவை மற்றும் முன்பதிவு நேரத்திற்கு ஏற்ப மாறுபடும் கட்டண முறை இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்டண விவரங்கள் பின்வருமாறு:



1. கோம்பாக் – கோத்தா பாரு (523 கி.மீ)
   சாதாரண சேவை: 125 ரிங்கிட் முதல்
   விரைவு சேவை: 147 ரிங்கிட் முதல்
2. கோம்பாக் – கோலா திரெங்கானு (378 கி.மீ)
   சாதாரண சேவை: 95 ரிங்கிட் முதல்
   விரைவு சேவை: 110 ரிங்கிட் முதல்
3. கோம்பாக்– கோத்தாசாஸ் (குவாந்தான்)
   சாதாரண சேவை: 60 ரிங்கிட் முதல்
   விரைவு சேவை: 68 ரிங்கிட் முதல்

சிறப்புச் சலுகைகள்: 50% கட்டணக் கழிவு: சிறுவர்கள் (2–12 வயது), மூத்த குடிமக்கள் (60 வயதுக்கு மேற்பட்டோர்), மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

40% கட்டணக் கழிவு: மாணவர்களுக்கு (13–24 வயது) வழங்கப்படுகிறது.

பயணச்சீட்டுகளை அதிகாரப்பூர்வ இணையதளம் (Ecrlmalaysia.com) வழியாக முன்பதிவு செய்து கொள்ளலாம்.



பருவநிலையின் பிடியில் நாளை:

வெப்பமும் வெள்ளமும் மாற்றும் மலேசியாவின் எதிர்காலம்

பசுமை மாறா மழைக்காடுகளுக்கும், ஆண்டு முழுவதும் சீரான வெப்பமண்டல வானிலைக்கும் பெயர் பெற்ற மலேசியா, இன்று பருவநிலை மாற்றத்தின் நேரடித் தாக்கங்களை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது.

ஒரு காலத்தில் ஆண்டு இறுதியில் மட்டுமே எதிர்பார்க்கப்பட்ட பருவமழை வெள்ளம், இப்போது திடீர் வெள்ளமாகவும் நிலச்சரிவாகவும் மாறி அன்றாட வாழ்க்கையைப் புரட்டிப் போடுகிறது. மறுபுறம், தாங்க முடியாத வெப்ப அலைகளும் வறட்சியும் மக்கள் நலனையும் பொருளாதாரத்தையும் அச்சுறுத்துகின்றன. பருவநிலை மாற்றம் என்பது இனி எதிர்கால அபாயமல்ல; அது மலேசியாவின் நிகழ்கால யதார்த்தமாக மாறிவிட்டது.

மலேசிய வானிலை ஆய்வுத் துறையின் நீண்டகாலத் தரவுகளின்படி, தீபகற்ப மலேசியாவில் பத்தாண்டுகளுக்கு 0.24 டிகிரி செல்சியஸ் வீதமும், சபா மற்றும் சரவாக்கில் முறையே 0.15 மற்றும் 0.14 டிகிரி செல்சியஸ் வீதமும் சராசரி வெப்பநிலை உயர்ந்து வருகிறது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் நாட்டின் வெப்பநிலை 1.7 முதல் 2.1 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்றும், கடல் மட்டம் சுமார் 0.74 மீட்டர் வரை உயரக்கூடும் என்றும் அறிவியல் ஆய்வுகள் எச்சரிக்கின்றன. இதனால் கடலோரப் பகுதிகள் கடலரிப்பிற்கும் வெள்ளத்திற்கும் உள்ளாகும் அபாயம் அதிகரித்துள்ளது.



இந்தப் பருவநிலை மாற்றம் மலேசியாவின் உணவுப் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. கணிக்க முடியாத கனமழையும் நீண்டகால வறட்சியும் நெல் சாகுபடி, காய்கறி உற்பத்தி மற்றும் செம்பனைத் தோட்டங்களைக் கடுமையாகப் பாதிக்கின்றன.

அண்மைக்கால வெள்ளப் பெருக்குகளால் நூற்றுக்கணக்கான ஹெக்டேர் விளைநிலங்கள் நீரில் மூழ்கியதால், அன்றாடக் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்ததை நாம் கண்கூடாகக் கண்டோம். வெப்ப அழுத்தம் காரணமாகக் கால்நடை வளர்ப்பும் பாதிக்கப்படுவதோடு, பயிர்களில் புதிய நோய்களும் பூச்சித் தாக்குதல்களும் பெருகி விவசாயிகளின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கின்றன.

வெள்ளம் மற்றும் புயல் அலைகளால் மலேசியாவிற்கு ஆண்டுதோறும் சராசரியாக 1.3 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான பொருளாதார இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆற்றங்கரை ஓரங்களில் வசிக்கும் மக்கள், குறைந்த வருமானம் கொண்ட நகர்ப்புறக் குடியிருப்பாளர்கள் மற்றும் பழங்குடியின மக்களே இத்தகைய இயற்கைப் பேரிடர்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். காடழிப்பு, திட்டமிடப்படாத நகரமயமாக்கல் மற்றும் போதிய வடிகால் வசதியின்மை ஆகியவை பருவநிலை மாற்றத்தின் பாதிப்புகளைப் பல மடங்கு தீவிரப்படுத்துகின்றன.

இந்தச் சவால்களை எதிர்கொள்ள அரசாங்கம் 'தேசியப் பருவநிலைத் தகவமைப்புத் திட்டம்' மற்றும் 'தேசியப் பருவநிலை மாற்றச் சட்டம்' போன்ற கொள்கை ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

2050-ஆம் ஆண்டிற்குள் நிகர பூஜ்ஜிய கரியமில வாயு வெளியேற்றத்தை எட்டுவதையும், புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதையும் நாடு இலக்காகக் கொண்டுள்ளது. 'திசைகள்' வாசகர்களுக்கு இந்தக் கட்டுரை உணர்த்தும் செய்தி தெளிவானது; பருவநிலை மாற்றத்தைத் தடுப்பது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல. நெகிழிப் பயன்பாட்டைக் குறைத்தல், மின்சாரம் மற்றும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், மரங்களை நடுதல் என ஒவ்வொரு குடிமகனின் அன்றாடப் பொறுப்புணர்வில்தான் நாளைய மலேசியாவின் பசுமையும் பாதுகாப்பும் அடங்கியுள்ளது.





பொகாராவின் பாதாள லோகம்: குப்தேஷ்வர் மகாதேவ் குகை.



இயற்கை எழில் கொஞ்சும் நேபாளத்தின் பொகாரா நகரம், இமயமலைச் சிகரங்களுக்கும் அமைதியான ஏரிகளுக்கும் மட்டுமல்லாமல், பூமிக்கடியில் ஒளிந்திருக்கும் ஆன்மீக அதிசயங்களுக்கும் பெயர் பெற்றது.பொகாராவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற டேவிஸ் நீர்வீழ்ச்சிக்கு நேர் எதிரே, பூமியின் ஆழத்திற்குள் செல்லும் ஒரு மர்மமான சுரங்கப்பாதை உள்ளது. உள்ளூர் மக்களால் 'பாதாள லோகம்' என்றும், பக்தர்களால் 'குப்தேஷ்வர் மகாதேவ் குகை' என்றும் போற்றப்படும் இந்த இடம், ஆன்மீகமும் இயற்கையின் பிரம்மாண்டமும் இணையும் ஓர் அபூர்வப் புள்ளியாகும். நேபாளி மொழியில் 'குப்தேஷ்வர்' என்றால் 'மறைந்திருக்கும் கடவுள்' என்று பொருள்.

தற்காசியாவின் மிக நீளமான குகைகளில் ஒன்றாகக் கருதப்படும் இது, சுண்ணாம்புப் பாறைகளால் ஆன இயற்கை அதிசயமாகும். சுமார் பதினாறாம் நூற்றாண்டில் உள்ளூர் மக்களால் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் குகைக்குள், மனிதக் கைவண்ணம் ஏதுமின்றி இயற்கையாகவே உருவான சுயம்பு சிவலிங்கம் அமைந்துள்ளது.

சிவபெருமான் இங்கு மறைந்து வாழ்வதாகப் பக்தர்கள் ஆழமாக நம்புகின்றனர். சுழல் படிக்கட்டுகள் வழியாகப் பூமிக்கடியில் இறங்கிச் செல்லும்போது, குளிர்ச்சியான காற்றும், பாறைகளின் விசித்திரமான வடிவங்களும் நம்மை வேறொரு உலகிற்கு அழைத்துச் செல்கின்றன.

சுமார் நாற்பது மீட்டர் ஆழத்தில் அமைந்துள்ள முதல் பகுதியில் இந்தப் புனிதமான சிவன் சன்னதி அமைந்துள்ளது. மகா சிவராத்திரி போன்ற விசேஷ நாட்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து வழிபடுகின்றனர்.

சிவன் சன்னதியைக் கடந்து இன்னும் ஆழமாகச் சென்றால், இயற்கையின் மற்றொரு பிரம்மாண்டத்தைத் தரிசிக்கலாம். அருகிலுள்ள டேவிஸ் நீர்வீழ்ச்சியிலிருந்து ஆர்ப்பரித்துப் பூமிக்குள் மறையும் தண்ணீர், இந்தப் பாதாளக் குகையின் வழியாகப் பாய்ந்தோடும் காட்சி மெய்சிலிர்க்க வைப்பதாக உள்ளது. குகையின் உட்புறம் உள்ள பாறை இடுக்குகளின் வழியாகச் சூரிய ஒளி மெல்லியதாக ஊடுருவும்போது, அந்தப் பாதாள நீர்வீழ்ச்சியின் சாரலும் சத்தமும் பார்ப்பவர்களைப் பிரமிப்பில் ஆழ்த்துகின்றன.

குகையின் புனிதத்தன்மையைக் காக்கும் பொருட்டு, சிவன் சன்னதி இருக்கும் பகுதியில் புகைப்படம் எடுக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், பாதாள நீர்வீழ்ச்சியை ரசிக்கும் பகுதியில் நின்று இந்த இயற்கை அதிசயத்தைப் புகைப்படம் எடுத்துக்கொள்ள அனுமதி உண்டு. பொகாரா செல்லும் பயணிகளுக்கு, பூமிக்கடியில் சிவபெருமான் வீற்றிருக்கும் இந்தப் பாதாள லோகப் பயணம் வாழ்நாளில் மறக்க முடியாத ஓர் அனுபவமாக அமையும் என்பதில் ஐயமில்லை.



மலேசிய விளையாட்டு வரலாற்றில் சில சாதனைகள் காலத்தைக் கடந்தும் நினைவுகூரப்பட வேண்டியவை. அத்தகைய சாதனைகளில் ஒன்று, 1969ஆம் ஆண்டு பர்மாவின் ரங்கூனில் நடைபெற்ற தென்கிழக்காசிய தீபகற்ப விளையாட்டுப் போட்டியில் (SEAP Games) காலணியின்றி 50 கிலோமீட்டர் நடைப்பந்தயத்தில் பங்கேற்று தங்கப் பதக்கம் வென்ற கே. திருமாலின் சாதனை!

காலணியின்றி நடந்து தங்கம் வென்றார்...

வரலாற்றில் தடம் பதித்த திருமால்



இன்று நடைப்பந்தயம் என்பது விளையாட்டுத் துறையின் ஓர் அங்கமாக இருந்தாலும், அக்காலத்தில் அதற்குப் பெரிய அங்கீகாரமோ வசதிகளோ கிடையாது. வறுமையும் வாழ்க்கைப் போராட்டமும் அவரைத் தளரச் செய்யவில்லை. மாறாக, அவையே அவரது விளையாட்டுப் பயணத்திற்குத் தூண்டுகோலாக அமைந்தன. காலணிகள் வாங்குவதற்கான வசதியில்லாத சூழலிலும் வெறுங்காலுடன் போட்டிகளில் பங்கேற்று சாதித்த அவரது பயணம் உண்மையிலேயே வியக்கத்தக்கது.

மலேசியத் தடகள வீரர்களில் திருமாலும் ஒருவர். எனினும், அக்காலகட்டத்தில் நிலவிய புறக்கணிப்பு காரணமாக அவரால் அந்தப் போட்டியில் பங்கேற்க முடியவில்லை.

1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3ஆம் தேதி கோலா திரெங்கானுவில் நடைபெற்ற தேசிய தடகளப் போட்டியில் 50 கிலோமீட்டர் நடைப்பந்தயத்தை 5 மணி நேரம் 2 நிமிடங்கள் 35.8 வினாடிகளில் நிறைவு செய்து சாதனை நேரத்தைப் பதிவு செய்தார். பின்னர் அந்தச் சாதனையை எஸ். கருணாநிதி முறியடித்தார்.

ஜோகூர் பாருவில் பிறந்த திருமால், சிங்கப்பூரில் தனது நடைப்பந்தயப் பயணத்தைத் தொடங்கினார். 1966, 1967, 1968 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சிங்கப்பூர் தேசிய இளையோர் சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்றார். 1967ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற ஆயடயல ஆயடை கூஷபை றுயடம போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்திய அவர், அடுத்த ஆண்டே தேசிய அளவிலான போட்டியில் வெற்றி பெற்றார்.

1969ஆம் ஆண்டு ரங்கூனில் நடைபெற்ற ளுநுஹஞ விளையாட்டுப் போட்டியில் 50 கிலோமீட்டர் நடைப்பந்தயத்தில் தங்கம் வென்றதுடன், புதிய போட்டிச் சாதனையையும் படைத்தார். இதன்மூலம் இந்தப் பிரிவில் மலேசியாவுக்குத் தங்கம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். 1971ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற அதே போட்டியிலும் வெள்ளிப் பதக்கத்தை வென்று மீண்டும் சாதனைப் படைத்தார். இதனால் அவர் மலேசிய நடைப்பந்தயத்தின் தந்தை என்ற பெருமையுடன் அழைக்கப்பட்டார்.

என்ற பெருமையுடன் அழைக்கப்பட்டார்.

1970ஆம் ஆண்டு எடின்பரோவில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்குத் தகுதி பெற்ற மூன்று

சுமார் 11 ஆண்டுகள் தடகளப் போட்டிகளில் ஈடுபட்டு பல்வேறு சவால்களையும் வெற்றிகளையும் சந்தித்த திருமால், பின்னர் விளையாட்டு வீரராக ஓய்வுபெற்று சிறைத்துறை அதிகாரியாகவும் நடைப்பந்தயப் பயிற்றுநராகவும் பணியாற்றினார்.

விளையாட்டு வீரராக ஓய்வுபெற்ற பின்னரும் நடைப்பந்தயத்தின் வளர்ச்சிக்கான அவரது அர்ப்பணிப்பு குறையவில்லை. 1991ஆம் ஆண்டு தேசிய நடைப்பந்தய வீரர்களான பி. திருகுமரன், எஸ். கருணாநிதி ஆகிய இருவரும் சீனாவில் பயிற்சி பெறுவதற்காக 46 ஆயிரம் அமெரிக்க டாலர் நிதியைத் திரட்டுவதற்கு அவர் பெரும் முயற்சி எடுத்தார்.

அப்போதைய தேசிய தடகளச் சங்கத்திடமும் தேசிய விளையாட்டு மன்றத்திடமும் அவர் விடுத்த கோரிக்கைகளுக்கு உரிய ஆதரவு கிடைக்காத நிலையில், பொதுமக்களிடம் நன்கொடை திரட்டி அந்தப் பயிற்சிப் பயணத்திற்கு வழிவகுத்தார். இளம் வீரர்களின் எதிர்காலத்திற்காக அவர் எடுத்த இந்த முயற்சி அவரது விளையாட்டுப் பற்றுக்குச் சான்றாகும்.

திருமாலின் வாழ்க்கையில் விளையாட்டுக்கு அப்பாற்பட்ட மற்றொரு முக்கியமான பரிமாணமும் உண்டு. மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயத்தின் பங்குனி உத்திரத் திருவிழாவின்போது, கோலாலம்பூரிலிருந்து மரத்தாண்டவர் ஆலயம் வரை நடைபெறும் பாதயாத்திரையை முதன்முதலில் தொடங்கி வைத்தவரும் அவர்தான். விளையாட்டுத் துறையில் நீண்ட தூரத்தைத் தனது கால்களால் கடந்து சாதனை படைத்தவர், ஆன்மிகப் பயணத்திலும் மக்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது அவரது வாழ்க்கையின் தனித்துவமான அம்சமாகும்.

2002ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் தேதி, தனது 54ஆவது வயதில் கோலாலம்பூர் பொது மருத்துவமனையில் அவர் காலமானார். மனைவி மல்லிகை, இரண்டு மகள்கள், ஒரு மகன் எனக் குடும்பத்தினரை விட்டுச் சென்றார்.







திருமால் இன்று உயிருடன் இல்லை. ஆனால், காலணியின்றி 50 கிலோமீட்டர் தூரம் நடந்து தங்கம் வென்ற அவரது சாதனை, இளம் வீரர்களுக்காக நிதி திரட்டிய அவரது தியாகம், மரத்தாண்டவர் ஆலயப் பாதயாத்திரைக்கு வித்திட்ட அவரது பங்களிப்பு ஆகியவை மறக்கப்படக் கூடாதவை.

வெற்றியை நோக்கி நடந்த அந்தக் கால்கள் நின்றுவிட்டன; ஆனால் அவர் பதித்த தடங்கள் மலேசிய விளையாட்டு வரலாற்றிலும் சமூக நினைவிலும் என்றும் அழியாதவை!





வியர்வை சிந்தி வாழ்ந்த ‘ஹார்வர்ட்’ தோட்டத் தமிழர்கள்

மலேசியத் தமிழர்களின் வரலாற்றை ரப்பர் மற்றும் செம்பனைத் தோட்டங்களைத் தவிர்த்துவிட்டு எழுதவே முடியாது. அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க தோட்டங்களில் ஒன்று கெடா மாநிலத்தில், சுங்கை பட்டாணி நகருக்கு அருகே அமைந்துள்ள புகழ்பெற்ற ‘ஹார்வர்ட்’ தோட்டமாகும். பல தலைமுறைகளாகப் பல்லாயிரக்கணக்கான இந்தியக் குடும்பங்களின் வாழ்வாதாரமாகவும், தமிழ் பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்ந்த பெருமை இந்தத் தோட்டத்திற்கு உண்டு.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இந்தத் தோட்டம் உருவாக்கப்பட்டது. வறண்ட காடுகளாக இருந்த இப்பகுதியைத் தங்களின் கடின உழைப்பால் பசுமையான ரப்பர் தோட்டங்களாக மாற்றியவர்கள் தமிழகத்திலிருந்து வந்த நமது முன்னோர்கள்தான். விடியற்காலை இருள் விலகும் முன்பே நெற்றியில் மின்விளக்குகளைக் கட்டிக்கொண்டு ரப்பர் மரம் வெட்டச் செல்லும் அவர்களின் அன்றாட வாழ்க்கை, மலேசியப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் அடித்தளமிட்டது.

ஹார்வர்ட் தோட்டம் வெறும் வேலை செய்யும் இடமாக மட்டுமின்றி, ஒரு முழுமையான தமிழ்க் கிராமமாகவே இயங்கியது. தோட்டத்தின் ஒவ்வொரு பிரிவிலும் அமைக்கப்பட்டிருந்த மாரியம்மன், முருகன் மற்றும் காளியம்மன் ஆலயங்கள் மக்களின் ஆன்மிக நம்பிக்கையாகவும், ஒன்றுகூடும் மையங்களாகவும் திகழ்ந்தன. குறிப்பாக, திருவிழாக் காலங்களில் கரகாட்டம், மயிலாட்டம், தெருக்கூத்து மற்றும் பாரம்பரிய இசை நிகழ்ச்சிகளுடன் தோட்டமே களைகட்டும்.



கல்வித் துறையிலும் ஹார்வர்ட் தோட்டம் தனித்துவமான வரலாற்றைக் கொண்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்காகத் தொடங்கப்பட்ட ஹார்வர்ட் தமிழ்ப்பள்ளிகள், பல தலைமுறைகளாக அறிவொளியை ஏற்றி வருகின்றன. வறுமையான சூழலில் வளர்ந்தாலும், இந்தத் தோட்டத்துப் பள்ளிகளில் படித்த பலர் இன்று மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், ஆசிரியர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும் மலேசியாவின் பல்வேறு பகுதிகளில் மிளிர்கின்றனர்.

வரிசையாக அமைக்கப்பட்டிருந்த மர வீடுகளும், மாலை நேரங்களில் குழாயடிகளில் கூடிப் பேசும் மக்களின் கலகலப்பும், பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளில் பகிர்ந்து கொள்ளப்பட்ட பலகாரங்களும் தோட்டப்புற வாழ்க்கையின் அழகிய நினைவுகளாகும். ஒரு குடும்பத்திற்குத் துக்கம் என்றாலும், திருமணம் என்றாலும் ஒட்டுமொத்தத் தோட்டமும் ஒரே குடும்பமாக நின்று தோள் கொடுத்த அந்த ஒற்றுமை இன்றும் வியக்க வைக்கிறது.

காலமாற்றத்திற்கு ஏற்ப ரப்பர் தோட்டங்கள் செம்பனைத் தோட்டங்களாக மாறின; பின்னர் நவீன குடியிருப்புகளாகவும், கோல்ஃப் மைதானங்களாகவும் உருமாறின. வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி தேடி இளைய தலைமுறையினர் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்ந்ததால், பழைய தோட்டப்புறக் குடியிருப்புகள் இன்று வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

இருப்பினும், கெடாவின் மண்ணில் வேர்விட்டு வளர்ந்த ஹார்வர்ட் தோட்டத்து நினைவுகள் அங்கு வாழ்ந்த ஒவ்வொரு தமிழரின் நெஞ்சிலும் பசுமையாக உள்ளன. தங்களின் வியர்வையால் இந்த மண்ணை வளமாக்கிய முன்னோர்களின் தியாகத்திற்கு ஹார்வர்ட் தோட்டம் என்றும் ஒரு வாழும் சாட்சியாகத் திகழ்கிறது.







மலேசியக் காடுகளின் மர்மம்:

மலையேறுபவர்களை வழிதவறச் செய்யும் ‘பூனியன்’ சக்தி

மலேசியாவின் அடர்ந்த மழைக்காடுகளும் உயரமான மலைத்தொடர்களும் இயற்கை ஆர்வலர்களையும் மலையேற்ற வீரர்களையும் எப்போதும் ஈர்க்கின்றன.

ஆனால், இந்தப் பசுமைக் காடுகளுக்குள் நுழையும் பலரும் எதிர்கொள்ளும் ஒரு விவரிக்க முடியாத மர்மமான அனுபவம் ‘பூனியன்’ எனப்படும் அமானுஷ்ய சக்தியாகும். மலேசிய நாட்டுப்புறக் கதைகளிலும், மலையேறுபவர்களின் நேரடி அனுபவங்களிலும் ‘ஓராங் பூனியன்’ என்பவர்கள் மனிதர்களின் கண்களுக்குத் தெரியாமல் காடுகளில் வாழும் மறைபொருள் உயிரினங்களாக நம்பப்படுகிறார்கள்.

மலேசியாவின் கினபாலு மலை, குனோங் தஹான், குனோங் லேடாங் மற்றும் ஜெராய் மலை உள்ளிட்ட பல அடர்ந்த காடுகளில் மலையேறுபவர்கள் திடீரெனத் திசைமாறிப் போவதுண்டு.

அனுபவம் வாய்ந்த வழிகாட்டிகள் மற்றும் நவீன திசைகாட்டிகள் உடன் இருந்தாலும், சில நேரங்களில் குழுவில் உள்ள ஒருவர் அல்லது சிலர் மட்டும் மர்மமான முறையில் பாதையை விட்டு விலகிச் சென்றுவிடுவார்கள்.

மலையேற்ற வீரர்களின் அனுபவங்களின்படி, இந்தப் பூனியன் சக்தி மனிதர்களைப் பல்வேறு வழிகளில் திசைதிருப்புகிறது. காட்டின் அமைதியான சூழலில், குழுவில் உள்ள மற்றவர்களின் குரலைப் போலவே யாரோ அழைப்பது போன்ற மாயக் குரல்கள் கேட்பதாகப் பலரும் கூறுகின்றனர். அந்தக் குரலைப் பின்தொடர்ந்து செல்பவர்கள், நன்கு பழக்கப்பட்ட ஒற்றையடிப் பாதையை விட்டு அடர்ந்த புதர்களுக்குள் சென்று வழிதவறி விடுகின்றனர்.

இன்னும் சிலருக்கு, காட்டின் நடுவே திடீரென அழகான கிராமங்கள், பிரம்மாண்டமான மாளிகைகள் அல்லது சுவையான உணவுப் பண்டங்கள் நிறைந்த விருந்து நடப்பது போன்ற மாயத் தோற்றங்கள் கண்களுக்குத் தெரியும்.

அந்த மாய உலகத்தால் ஈர்க்கப்பட்டு உள்ளே செல்பவர்கள், வெளி உலகத் தொடர்பை இழந்து நாட்கள் கணக்கில் காட்டிற்குள்ளேயே சிக்கிக்கொள்கின்றனர்.

மலையேறுபவர்கள் காட்டிற்குள் நுழையும்போது கடைப்பிடிக்க வேண்டிய பாரம்பரிய விதிகளை மீறுவதே இத்தகைய இடையூறுகளுக்குக் காரணம் என்று உள்ளூர் பழங்குடியினரும் முதியவர்களும் கூறுகின்றனர்.

காட்டிற்குள் சத்தமாகப் பேசுவது, ஆணவத்துடன் நடந்துகொள்வது, தாவரங்களையோ விலங்குகளையோ தேவையின்றிச் சேதப்படுத்துவது மற்றும் காட்டின் புனிதத்தைக் கெடுப்பது போன்ற செயல்கள் பூனியன் சக்திகளைக் கோபப்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

இத்தகைய சூழலில் வழிதவறிப் போனவர்களைத் தேடும் மீட்புப் பணிகளிலும் பல விசித்திரங்கள் நிகழ்வதுண்டு. மீட்புக் குழுவினர் தேடிச் செல்லும் அதே இடத்தில்தான் வழிதவறியவர் இருப்பார்;

ஆனால் இருவராலும் ஒருவரை ஒருவர் பார்க்க முடியாது. வழிதவறியவர் தன்னைத் தேடுபவர்களின் குரலையும் நடமாட்டத்தையும் மிக அருகில் கேட்பார்; ஆனால் அவர் கத்தும் சத்தம் மீட்புக் குழுவினருக்குக் கேட்காது. இதனை உள்ளூர் மக்கள் ‘மறைக்கப்படுதல்’ என்று அழைக்கின்றனர்.

அறிவியல் ரீதியாகப் பார்த்தால், அடர்ந்த காடுகளில் ஏற்படும் கடுமையான சோர்வு, நீர்ச்சத்துக் குறைபாடு, குறைந்த வெப்பநிலை மற்றும் மன அழுத்தம் ஆகியவை மனித மூளையில் மாயத் தோற்றங்களையும் பிரமைகளையும் உருவாக்கலாம் என்று மருத்துவர்கள் விளக்குகின்றனர்.

அடர்ந்த மரங்களின் நிழலும், காட்டின் ஒரே மாதிரியான நிலப்பரப்பும் திசை உணர்வைக் குழப்பிவிடும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.



அறிவியல் விளக்கங்கள் எதுவாக இருந்தாலும், மலேசியக் காடுகளில் மலையேறுபவர்கள் இன்றும் இயற்கையின் மீது மிகுந்த மரியாதையுடனும், எச்சரிக்கையுடனும் பயணிக்கின்றனர். காட்டின் அமைதியைக் குலைக்காமல், குழுவை விட்டுப் பிரியாமல் பயணிப்பதே பூனியன் போன்ற மர்மங்களில் இருந்து தற்காத்துக்கொள்ளும் சிறந்த வழியாகக் கருதப்படுகிறது.



ஹைலண்ட் டவர்ஸில் இன்னும் உலவும் மர்மங்கள்

நாட்டில் சில இடங்கள் அவற்றின் வரலாற்றுக்காகப் பிரபலமாகியுள்ளன. இன்னும் சில இடங்களோ நடந்த துயரச் சம்பவங்களாலும், அவற்றைச் சுற்றிப் பின்னப்பட்ட மர்மக் கதைகளாலும் மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன. அப்படிப்பட்ட ஓர் இடம்தான் சிலாங்கூர், உலு கிள்ளானில் அமைந்துள்ள ஹைலண்ட் டவர்ஸ். ஒருகாலத்தில் வசதியான குடும்பங்களின் குடியிருப்பாகவும், உயர்தர அடுக்குமாடிக் குடியிருப்பாகவும் விளங்கிய இந்தக் கட்டடத் தொகுதி இன்று மலேசியாவின் மறக்க முடியாத துயரத்தின் அடையாளமாக மாறியுள்ளது. அதேவேளை, அங்கு பேய்கள் நடமாடுவதாகக் கூறப்படும் கதைகளும் பல ஆண்டுகளாக மக்களிடையே உலவி வருகின்றன.

1993ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி. மலேசியாவையே உலுக்கிய அந்தக் கருப்பு நாள். ஹைலண்ட் டவர்ஸின் மூன்று கட்டடங்களில் ஒன்றான பிளாக் 1-இல் நிகழ்ந்த நிலச்சரிவைத் தொடர்ந்து சரிந்து விழுந்தது. இந்தக் கோரச் சம்பவத்தில் 48 பேர் உயிரிழந்தனர்.

குடியிருப்பாளர்கள், குடும்பங்கள், குழந்தைகள் எனப் பலரின் வாழ்க்கையை ஒரே நொடியில் புரட்டிப்போட்ட அந்தச் சம்பவம் நாட்டின் வரலாற்றில் ஆழமான துயரத்தைப் பதித்தது. எஞ்சியிருந்த மற்ற இரண்டு கட்டடங்களும் பாதுகாப்புக் காரணங்களால் காலி செய்யப்பட்டன. பின்னர் அவை கைவிடப்பட்ட நிலையில் நீண்டகாலம் காணப்பட்டன.

அதன்பிறகுதான் ஹைலண்ட் டவர்ஸைச் சுற்றி மர்மக் கதைகள் அதிகரிக்கத் தொடங்கின.

இரவு நேரங்களில் கட்டடத்தின் உள்ளிருந்து விசித்திரமான சத்தங்கள் கேட்பதாகவும், யாருமில்லாத இடங்களில் மனித உருவங்கள் தென்படுவதாகவும் சிலர் கூறினர். குறிப்பாக, நள்ளிரவு நேரங்களில் அந்தப் பகுதியைக் கடந்து செல்லும்போது அச்சமூட்டும் அனுபவங்களைச் சந்தித்ததாகப் பலரும் சமூக வலைத்தளங்களிலும் காணொளிகளிலும் பகிர்ந்துள்ளனர்.

இடிபாடுகளுக்குள் உயிரிழந்தவர்களின் ஆவிகள் இன்னும் அங்கேயே உலவுவதாகவும் சில கதைகள் பரவின. இரவில் பெண்களின் அழுகுரல் கேட்பதாகவும், வெறிச்சோடிய கட்டடத்தின் ஜன்னல்களில் உருவங்கள் தெரிவதாகவும் கூறப்படும் கதைகள் இவ்விடத்தின் மர்மப் புகழை மேலும் அதிகரித்தன.

இந்தக் கதைகள் காரணமாக அமானுஷ்ய ஆர்வலர்கள், காணொளி தயாரிப்பாளர்கள், இளைஞர்கள் எனப் பலரும் அந்த இடத்தை ஆராய முற்பட்டனர். சிலர் இரவு நேரங்களில் அங்கு சென்று தங்களுடைய கைத்தொலைபேசிகளில் காணொளிகளைப் பதிவு செய்தனர்.

ஆனால், இந்தக் கூற்றுகளுக்கு இதுவரை உறுதியான அறிவியல் ஆதாரம் எதுவும் வெளியாகவில்லை.

2015ஆம் ஆண்டில் Projekt OFO என்ற இளைஞர் குழுவினர் ட்ரோன் மூலம் ஹைலண்ட் டவர்ஸை ஆராய்ந்து காணொளி ஒன்றையும் வெளியிட்டனர். மூன்று நாட்கள், இரண்டு இரவுகள் அப்பகுதியில் படப்பிடிப்பு நடத்தியபோதும் எந்தவொரு அமானுஷ்ய நிகழ்வையும் தாங்கள் கண்டறியவில்லை என்று அந்தக் குழுவினர் தெரிவித்திருந்தனர்.

அப்படியானால், ஹைலண்ட் டவர்ஸில் பேய்கள் இருப்பதாகக் கூறப்படும் கதைகள் அனைத்தும் வெறும் கற்பனையா? அல்லது அச்சமூட்டும் அந்தச் சூழலும், 48 உயிர்களைப் பலிகொண்ட துயர நினைவுகளும் மனிதர்களின் மனதில் இத்தகைய உணர்வுகளை ஏற்படுத்துகின்றனவா?



அந்தக் கைவிடப்பட்ட கட்டடங்கள் பாதுகாப்பற்ற இடங்களாகவும் மாறியிருந்தன. அத்துமீறி நுழைபவர்கள், போதைப்பொருள் பயன்படுத்துவோர் மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனால் அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஹைலண்ட் டவர்ஸின் எஞ்சிய கட்டடங்களை இடித்துத் தள்ளி, அந்த இடத்தைப் பொழுதுபோக்குப் பூங்காவாக மாற்றும் திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டு அக்டோபரில் வெளியான செய்தியின்படி, எஞ்சிய கட்டடங்களை அந்த ஆண்டின் இறுதிக்குள் இடிப்பதற்கான திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.இறுதியில், ஹைலண்ட் டவர்ஸின் மர்மக் கதைகள் உண்மையா, கற்பனையா என்பது இன்னும் விவாதத்திற்குரியதாக இருக்கலாம். ஆனால் அங்கு 48 உயிர்கள் பலியானது மறுக்க முடியாத வரலாற்று உண்மை.

பேய்களைத் தேடிச் செல்வதைவிட, அந்தத் துயரத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதும், இத்தகைய பேரிடர்கள் மீண்டும் நிகழாமல் பாதுகாப்பான கட்டடங்களையும் குடியிருப்புகளையும் உருவாக்குவதுமே சமூகத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

சில இடங்களைப் பேய்க் கதைகள் பிரபலப்படுத்தலாம். ஆனால் ஹைலண்ட் டவர்ஸை உலகம் மறக்க முடியாததற்குக் காரணம், அங்கு நிகழ்ந்த அந்தக் கோரமான மனிதத் துயரம்தான்.





பெர்லிஸில் களைகட்டிய

பாரம்பரிய நெல் அறுவடை





நவீன காலத்துப் பொழுதுபோக்குகளை ஒதுக்கிவைத்துவிட்டு, சுமார் 40 சிறார்கள் வயல் சேற்றில் இறங்கிப் பாரம்பரிய விவசாய அனுபவத்தை உற்சாகமாகக் கொண்டாடினர். பெர்லிஸ் மாநிலம், பாடாங் பெசார் பகுதியில் உள்ள கம்போங் பாலிக் புக்கிட் கிராமத்தில் அமைந்துள்ள 'பால்புகாவ்ஸ்' மையத்தில் நடைபெற்ற 'இளம் நெல்வயல் காவலர்கள்' நிகழ்ச்சியே இதற்குக் களமாக அமைந்தது.

ஆறு முதல் பதினைந்து வயதுக்குட்பட்ட இந்தச் சிறார்கள், பாரம்பரிய அரிவாள்களைக் கையில் ஏந்திக்கொண்டு, பொன்னிற நெற்கதிர்களை அறுவடை செய்வதில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அறுவடை செய்த நெல்மணிகளைப் பாரம்பரிய முறங்களால் புடைத்துத் தூய்மைப்படுத்தியதோடு, நீர் நிரம்பிய வயல்வெளிகளில் இறங்கி மீன் பிடித்தும் மகிழ்ந்தனர்.

சிறார்கள் களத்தில் இறங்கிப் பணியாற்றிய இந்தப் பாரம்பரிய நிகழ்வு,



பெர்லிஸ் மாநில இளவரசியார் (ராஜா புவான் மூடா) துவான்கு டாக்டர் லைலாதுல் ஷாஹ்ரீன் ஆகாஷா கலீல் அவர்களின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது. அவர் தனது புதல்வி ஷெரிஃபா ஃபாரா அட்ரியானா துவான்கு சையத் ஃபைசுதீன் புத்ரா ஜமாலுல்லைல் அவர்களுடன் நேரில் வருகை தந்து சிறார்களை உற்சாகப்படுத்தினார். மேலும், வைக்கோலால் செய்யப்பட்ட சிறிய சோளக்காட்டு பொம்மைகளுடன் இளவரசியார் புகைப்படம் எடுத்துக்கொண்டது அனைவரையும் கவர்ந்தது.

மலேசியாவின் பாரம்பரிய விவசாயப் பண்பாட்டுடன் இளைய தலைமுறையினரை மீண்டும் இணைக்கும் நோக்கில் இந்நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டது. பாரம்பரிய நெல் விவசாயச் சமூகத்தினரின் கடின உழைப்பையும், அன்றாட வாழ்க்கை முறையையும் சிறார்கள் நேரடியாகக் கண்டறிந்து உணர இதுவொரு அரிய வாய்ப்பாக அமைந்ததாக பெர்னாமா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பெர்லிஸ் விவசாயத் துறையுடன் இணைந்து பால்புகாவ்ஸ் மையம், ஈக்கோப்ரோ பயிற்சி மையம் மற்றும் கிராஸ் மலேசியா பெர்லிஸ் ஆகிய அரசு சாரா அமைப்புகள் ஒன்றிணைந்து இந்நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தன.





மழை இன்னும் பெய்துகொண்டிருந்தது. ஆனால் முருகனின் மனதில் ஏதோ ஒரு நிறைவு. ஹரிஸ் தனது மருத்துவமனைப் பணிக்குத் திரும்பினார்.

அடுத்த நாள் காலையில் உணவகத்திற்கு வந்த முருகனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. வாசலில் ஒரு சிறிய உறை இருந்தது. அதற்குள் சில பணத்தாள்களும் ஒரு கடிதமும் இருந்தன.

''அன்புள்ள முருகன் தம்பிக்கும் ஹரிஸ் தம்பிக்கும்,

நேற்று நீங்கள் எனக்குக் கொடுத்தது உணவு மட்டுமல்ல; இந்த உலகத்தில் இன்னும் மனிதநேயம் உயிருடன் இருக்கிறது என்ற நம்பிக்கையையும் கொடுத்தீர்கள். என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு மாலை அது.

மனிதம் பேசும் நேரம்

சிறுகதை

- வனஜா ஆறுமுகம், சிலிம் ரீவர்.

கோலாலம்பூரில் அன்று மாலை பலத்த மழை பெய்துகொண்டிருந்தது. அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தவர்கள் மழையில் நனையாமல் இருக்கக் கடைகளின் முன்புறங்களில் ஒதுங்கி நின்றனர். சாலையோரத்தில் இருந்த ஒரு சிறிய உணவகத்தின் வாசலில், வயதான ஒருவர் நனைந்த சட்டையுடன் அமர்ந்திருந்தார். அவருடைய கையில் ஒரு பழைய பை. முகத்தில் சோர்வு. கண்களில் ஒருவிதத் தவிப்பு.
அந்த உணவகத்தை நடத்தி வந்தவர் முருகன். இருபது ஆண்டுகளாக அதே பகுதியில் உணவகம் நடத்தி வருபவர். அந்த முதியவரைச் சிறிது நேரமாகக் கவனித்துக்கொண்டிருந்தார்.

''ஐயா, உள்ளே வாங்க. மழையில் ஏன் அங்கேயே உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று அழைத்தார்.

''பரவாயில்லை தம்பி. கொஞ்சம் மழை நின்றதும் போய்விடுகிறேன்,'' என்றார் முதியவர்.

''சாப்பிட்டீர்களா?''

அந்தக் கேள்விக்குப் பதிலாக முதியவர் மௌனமாகத் தலையைக் குனிந்தார்.

முருகன் அவரை உள்ளே அழைத்து, ஒரு மேசையில் அமர வைத்தார். கூடான சாதம், காய்கறிக் கறி, ஒரு முட்டை என உணவு பரிமாறினார்.





அப்போது உணவகத்திற்குள் நுழைந்த இளைஞன் ஒருவர் அந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் பெயர் ஹரிஸ். அருகிலுள்ள மருத்துவமனையில் மருத்துவராகப் பணியாற்றுபவர்.

''ஐயா, உங்களுக்கு உடல்நிலை சரியில்லையா? எந்த மருத்துவமனைக்குச் சென்றீர்கள்?'' என்று அக்கறையுடன் விசாரித்தார்.

முதியவர் மருத்துவமனையின் பெயரைக் கூறினார். ஹரிஸ் உடனே தனது கைப்பேசியில் கிரேப் வாகனம் ஒன்றை ஏற்பாடு செய்தார்.

''ஐயா, உங்களை வீட்டில் பாதுகாப்பாகச் சேர்த்துவிடுகிறோம். கவலைப்படாதீர்கள்,'' என்றார்.

முருகனும் அவருடன் செல்ல முன்வந்தார்.
வாகனம் வந்ததும் முதியவர் இருவரையும் பார்த்தார்.
''நீங்கள் இருவரும் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று எனக்குத் தெரியாது. எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியாது. ஆனால், இன்று என் பிள்ளைகளாக இருந்து உதவி செய்திருக்கிறீர்கள்,'' என்றார்.



''எவ்வளவு பணம் தம்பி?''
என்று கேட்டார் முதியவர்.

''முதலில் சாப்பிடுங்கள் ஐயா. பிறகு பார்த்துக்கொள்ளலாம்.''
சாப்பிட்டு முடித்த முதியவர் தனது பழைய பையைத் திறந்து சில சில்லறைகளை எடுக்க முயன்றார்.

''வேண்டாம் ஐயா. இன்று என்னுடைய விருந்தினர் நீங்கள்,'' என்றார் முருகன்.

முதியவரின் கண்களில் கண்ணீர் வழிந்தது.
''என் மகன் வெளிநாட்டில் இருக்கிறான். மகள் வேறு ஊரில் இருக்கிறாள். சில நாட்களாக உடல்நிலை சரியில்லை. இன்று மருத்துவமனைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பப் பேருந்துக்காகக் காத்திருந்தேன். மழையில் நனைந்துவிட்டேன். பணமும் போதவில்லை. யாரிடமும் கேட்க மனம் வரவில்லை,'' என்றார்.



ஹரிஸ் சிரித்துக்கொண்டே, ''ஐயா, உதவுவதற்கு முதலில் மனிதராக இருந்தால் போதும். மற்ற அடையாளங்கள் பிறகுதான்,'' என்றார்.

முதியவர் முருகனின் கைகளைப் பற்றிக்கொண்டார்.

''உங்கள் உணவுக்கான பணத்தைத் திருப்பித் தர முடியாமல் போகலாம். ஆனால் இன்று நீங்கள் கொடுத்த அன்பை மறக்கமாட்டேன்,'' என்றார்.

வாகனம் புறப்பட்டது.

உங்கள் இருவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

அன்புடன், ஒரு தந்தை.''

கடிதத்தைப் படித்த முருகன் சில நொடிகள் அமைதியாக நின்றார். பின்னர் அந்தப் பணத்தைத் தனது உணவகத்தில் ஒரு சிறிய பெட்டியில் வைத்தார். அதன் மீது ஒரு வாசகத்தையும் எழுதினார்:

''பணம் இல்லாதவர்களுக்கு உணவு உண்டு; மனிதநேயம் உள்ளவர்களுக்கு இந்த வாசல் என்றும் திறந்திருக்கும்!''

அந்த நாளிலிருந்து அந்த உணவகத்தில் ஒரு புதிய வழக்கம் தொடங்கியது. தினமும் குறைந்தது ஒருவருக்காவது இலவசமாக உணவு வழங்கப்பட்டது.

ஏனெனில், முருகன் புரிந்துகொண்டிருந்தார்...

உலகில் எல்லாவற்றையும் பணத்தால் வாங்கிவிட முடியாது. ஆனால் ஒருவருக்குக் காட்டும் அன்பு, இன்னொருவரின் வாழ்க்கையில் அழியாத நம்பிக்கையை விதைக்க முடியும்.

மனிதர்களைப் பிரிப்பது அவர்களின் அடையாளங்கள்; மனிதர்களை இணைப்பது அவர்களின் மனிதநேயம்!

கோப்பைகளுக்குள் கரையும் வரலாறு:

நூற்றாண்டு கடந்து நிற்கும் மலேசியக் காப்பிக்கடைகள்

மலேசியாவின் எந்தவொரு சிறு நகரத்திற்குச் சென்றாலும், அதிகாலைப் பொழுதில் மணக்கும் வறுத்த காப்பித் தூளின் வாசமும், வட்ட வடிவப் பளிங்கு மேசைகளைச் சுற்றி எழும் உரையாடல்களும் நமது வாழ்வோடு இரண்டறக் கலந்தவை. வெறும் உணவகங்களாக மட்டுமல்லாமல், மலேசியாவின் பல்லினச் சமூகத்தை ஒன்றிணைக்கும் ஜனநாயகப் பொதுவெளிகளாகத் திகழ்பவை பாரம்பரியக் காப்பிக்கடைகள் எனப்படும் 'கோப்பிதியாம்'கள்.

ஒரு நூற்றாண்டிற்கும் மேலாகத் தலைமுறைகள் தாண்டியும் சுவை மாறாமல் இயங்கி வரும் இந்த உணவகங்கள், நாட்டின் வரலாற்றையும் சமூகப் பிணைப்பையும் சுமந்து நிற்கும் உயிருள்ள அருங்காட்சியகங்களாகும்.



'கோப்பிதியாம்' என்ற சொல்லே மலேசியாவின் பன்முகத்தன்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. மலாய் மொழியில் காப்பியைக் குறிக்கும் 'கோப்பி' என்ற சொல்லும், ஹோக்கியன் மொழியில் கடையைக் குறிக்கும் 'தியாம்' என்ற சொல்லும் இணைந்து உருவானதே இந்தப் பெயர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சீனாவின் ஹைனான் தீவிலிருந்து மலாயாவிற்குப் புலம்பெயர்ந்தவர்கள், ஆங்கிலேயர்களின் வீடுகளிலும் கப்பல்களிலும் சமையல்காரர்களாகப் பணியாற்றினர்.

அதன் மூலம் அவர்கள் கற்றுக்கொண்ட ரொட்டி சுடும் கலையையும், பழங்காலக் காப்பி தயாரிக்கும் முறையையும் இணைத்து உருவாக்கியதே இன்றைய பாரம்பரியக் காப்பிக்கடை கலாச்சாரமாகும்.

மலேசியாவின் மூலை முடுக்குகளில் இன்றும் நூற்றாண்டை நெருங்கியும் கடந்தும் கம்பீரமாக இயங்கி வரும் பல காப்பிக்கடைகள் உள்ளன. 1920-ஆம் ஆண்டு ஈப்போவில் தொடங்கப்பட்ட 'காங் தாய் லாய்', 1921-இல் தைப்பிங்கில் தொடங்கப்பட்ட 'யுட் சன்', 1928-இல் கோலாலம்பூரில் உருவான 'யுட் கீ' மற்றும் 1938-இல் ரயில் நிலையத்திற்குள் தொடங்கப்பட்ட 'குளுவாங் ரயில் காப்பி' ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

மர நாற்காலிகள், பழமையான சுவர்க் கடிகாரங்கள், கரி அடுப்பில் சுடப்படும் கயா வெண்ணெய் ரொட்டி மற்றும் அரைவேக்காட்டு முட்டை என இந்தக் கடைகளின் சூழல் இன்றும் காலத்தால் உறைந்து போனது போல் காட்சியளிக்கிறது.

நவீன குளிரூட்டப்பட்ட உணவகங்கள் பெருகிவிட்ட இன்றைய காலகட்டத்திலும், பாரம்பரியக் காப்பிக்கடைகளின் தனித்துவம் சற்றும் குறையவில்லை. இங்கு ஒரே மேசையில் அமர்ந்து மலாய்க்காரர்களும்,





சீனர்களும், இந்தியர்களும் நாட்டு நடப்புகளையும், அரசியலையும், அன்றாட வாழ்க்கையையும் பகிர்ந்து கொள்வது மலேசியாவின் சமூக நல்லிணக்கத்தின் அடையாளமாகும். காலையில் நாசி லெமாக், ரொட்டி சனாய் முதல் மதிய உணவு வரை ஒரே கூரையின் கீழ் பல்வேறு இனத்தவரின் உணவுகள் பரிமாறப்படுவது இவற்றின் சிறப்பம்சமாகும்.

இருப்பினும், நவீன வாழ்க்கை முறை மாற்றங்களும், அடுத்த தலைமுறையினர் இந்தத் தொழிலைத் தொடரத் தயங்குவதும் பல பழமையான காப்பிக்கடைகளுக்குச் சவாலாக மாறியுள்ளன. சுயசரிதைகளைப் போல ஒவ்வொரு பழைய காப்பிக்கடையும் ஒரு நகரத்தின் வளர்ச்சியையும் மக்களின் உழைப்பையும் பதிவு செய்துள்ளது.

பாரம்பரியக் காப்பிக்கடைகள் என்பவை வெறும் பசியாற்றும் இடங்கள் அல்ல, அவை நமது கூட்டு நினைவுகளையும் சமூக ஒற்றுமையையும் பாதுகாக்கும் பொக்கிஷங்கள். அவற்றை ஆதரிப்பதும் அடுத்த தலைமுறைக்கு அறிமுகப்படுத்துவதும் நமது கடமையாகும்.

மாயக் கண்ணனின் நிழல் வலைவு: சோப்ராஜின் காந்த வலை.



● எழுத்து: இ.எம்.சாமி

ஒரு கதையின் நாயகனைப் புரிந்து கொள்ள அவனது வேர்களைத் தேட வேண்டும்; ஆனால் சோப்ராஜின் வேர்களோ வஞ்சகத்தாலும், புறக்கணிப்பாலும் ஆனவை. 1944-இல் வியட்நாமில் பிறந்த குருசரண் பாக்வானி சார்லஸ் சோப்ராஜ், ஓர் இந்தியத் தந்தைக்கும் வியட்நாமியத் தாய்க்கும் பிறந்தவர். தந்தை அவசரப்பட்டுக் கைவிட, தாயின் பிரெஞ்சுக் கணவரோ இவனைத் தன் மகனாக ஏற்க மறுக்க, எந்த தேசத்து அடையாளமும் இல்லாத அநாதையாக பிரான்ஸ் நாட்டின் தெருக்களில் அலைந்தான் சோப்ராஜ்.

சிறு வயதிலேயே உலகத்தால் நிராகரிக்கப்பட்ட அவனது பிஞ்சு நெஞ்சில், வன்மமும் வஞ்சகமும் முளைவிடத் தொடங்கின. பிரான்ஸ்

1



2

நாட்டின் சிறைச்சாலைகள் அவனுக்குத் தண்டனைக்கூடங்களாக இருக்கவில்லை, மாறாகப் பெரும் குற்றங்களை எப்படிக் கச்சிதமாகச் செய்வது என்று கற்றுத் தரும் பல்கலைக்கழகங்களாக மாறின. அங்குதான் அவன் உளவியலையும், மனிதர்களின் பலவீனங்களை ஆளும் கலையையும், பிரெஞ்சு மொழியின் வசீகர உச்சரிப்பையும் கற்றுத் தேர்ந்தான்.ஆசியா முழுவதிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து, அவர்களுக்குத் தோழனாக மாறி, பின் உணவில் விஷம் வைத்துக் கொன்று, அவர்களின் பாஸ்போர்ட்டில் தன் புகைப்படத்தை ஒட்டி உலகை வலம் வந்தான்.

நாட்கள் நகர நகர, மேரியால் அவனது காந்தப் புன்னகையையும், இரவுகளில் அவன் காதோடு காதாகச் சொன்ன கவித்துவமானப் பொய்களையும் கடந்து வாழ முடியாமல் போனது. சோப்ராஜ் அவளைத் தனித்துவமானவளாக, தன் பிரபஞ்சத்தின் ஒரே ராணியாக உணர வைத்தான்; சொகுசுக் கார்களும், ஆடம்பர ஹோட்டல்களும், அவன் காட்டிய மாய

6



சட்டத்தின் கண்களில் மண்ணைத் தூவி வழுக்கி ஓடுவதில் வல்லவனான அவனுக்கு போலீசார் வைத்த பெயர்தான் "தி செர்பென்ட்" (The Serpent) என்ற நச்சுப் பாம்பு. எத்தனையோ நாடுகளின் போலீசாரைத் தூங்க விடாமல் செய்த இந்த உலக மகா குற்றவாளி, பெண்களின் இதயங்களை மட்டும் எப்படி மிக எளிதாகத் திருடினான்?

சிறையிலிருந்து வெளிவந்த சோப்ராஜ் ஓர் அழகான வேட்டைக்காரனாக மாறினான். கூர்மையான கண்கள், தடகள வீரன் போன்ற உடல்வாகு, உலகமே வியக்கும் தத்துவ ஞானம், கையில் எப்போதும் ததும்பும் ஒயின் கோப்பை எனத் தன்னை ஒரு பெரும் கோடீஸ்வரனாக உலகிற்குக் காட்டிக் கொண்டான்.

தாய்லாந்து தலைநகர் பாங்காக் நகரின் அந்திப் பொழுது தங்க நிறத்தில்

3



உலகமும் அவளை முற்றிலும் திணறடித்தன. ஆனால், அந்தப் பட்டுப் போன்ற மென்மையான காதலுக்குப் பின்னால் ஒரு கொடூரமான நிழல் உலகக் கொலைகாரன் ஒளிந்திருக்கிறான் என்பதை அவள் அறிந்தபோது காலம் கடந்திருந்தது. சோப்ராஜ் தன் கைகளால் இழைத்த துரோகங்களையும், சுற்றுலாப் பயணிகளுக்கு விஷம் கொடுத்துக் கொன்ற கொடூரங்களையும் மேரி நேரில் கண்ட போதும், அவளால் அந்த

7

மாயக் கண்ணனின் பிடியில் இருந்து விடுபட முடியவில்லை.அவனது தீராக் காதல் அவளுக்கு ஒரு போதை மருந்தாக மாறியிருந்தது; அது அவளது நற்பண்புகளையும், சுய அறிவையும் முற்றிலும் அழித்து, ஒரு கொடூரக் குற்றவாளியின் நிழலாக அவளை வாழ வைத்தது. இறுதியில், இந்தியச் சிறையின் இருட்டறைக்குள் அவர்கள் தள்ளப்பட்ட போதும், மரணப் படுக்கையில் அவளது கடைசி மூச்சுப் பிரிந்த போதும், சோப்ராஜ்



4

உருகி வழிந்து கொண்டிருந்த வேளையில், மேரி-ஆண்ட்ரே லெக்லெர்க் என்ற அந்த பிரெஞ்சு-கனடியப் பெண் தன் காபிக் கோப்பையை வெறித்தபடி அமர்ந்திருந்தாள். புதிய தேசத்தின் தனிமையும், அந்திமாலையின் ஏகாந்தமும் அவளைச் சூழ்ந்திருந்த அந்த நொடிக் கணத்தில்தான், காற்றில் மிதந்து வந்த மெல்லிய பிரெஞ்சு மொழியின் உச்சரிப்பு அவள் கவனத்தை ஈர்த்தது.

தன் கண்களால் நெய்த அந்த ஆபத்தான காதல் வலையிலிருந்து மேரியால் ஆயுள் வரை தப்பிக்கவே முடியாமல் போனது. சோப்ராஜ் இந்தியாவில் திகாத் சிறையில் இருந்த போது, தன்னை விடப் பல வயது இளையவரான நிஹிதா பிஸ்வாஸ் என்ற நேபாளப் பெண்ணை எப்படித் தன் காதலால் வீழ்த்தித் திருமணம் செய்தார் என்ற அடுத்த காதல் கதையைத் தொடரலாமா?

8





நிமிர்ந்து பார்த்தவள், காந்த விசைக்குக் கட்டுப்பட்ட இரும்புத் துகளாய் உறைந்து போனாள்; அங்கே நின்றிருந்தான் சார்லஸ் சோப்ராஜ். விலையுயர்ந்த பட்டுச் சட்டையும், முகத்தில் தவழ்ந்த மெல்லிய புன்னகையும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பார்ப்பவரை ஊடுருவிச் செல்லும் அவனது கூர்மையான பார்வையும் அவளை முதல் நொடியிலேயே சுண்டி இழுத்தன.

அனைத்துலக ரத்தின வியாபாரி என்ற போர்வையில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட சோப்ராஜ், மேரியின் கண்களை நேராக நோக்கி, "உன் கண்களில் இருக்கும் அமைதி, இந்த உலகத்தின் எந்த விலைமதிப்பற்ற வைரத்திலும் இல்லை" என்று காதலின் உச்சக்கட்ட ரசத்தை வார்த்தைகளில் குழைத்துத் தெளித்தான்.

5

சோப்ராஜ் இந்தியாவில் திகாத் சிறையில் இருந்த போது, தன்னை விடப் பல வயது இளையவரான நிறநிதா பிஸ்வாஸ் என்ற நேபாளப் பெண்ணை எப்படித் தன் காதலால் வீழ்த்தித் திருமணம் செய்தார் என்ற அடுத்த காதல் கதையைத் தொடரலாமா?



6-ஆவது திரும்பி வந்த ஆரணங்கு: உலகத் தமிழாராய்ச்சி மாநாடு...

ஒரு வரலாற்றுப் பார்வை

(சிறப்புக் கட்டுரை: இ.எம். சாமி)



மாநாட்டில் எழுச்சிப் பாடல் பாடப்பட்ட போது (இடமிருந்து வலம்) தினமணி அதிபர் அருள்மாமணி, பேராசிரியர் ஏஷர் டத்தோ சுப்பிரமணியம், இலங்கை அமைச்சர் திரு. ராஜதுரை, திரு மருதபிள்ளை டத்தோ சாமிவேலு, பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் மகாதீர் முகம்மது, கலைஞர் கருணாநிதி மசீச தேசியத தலைவர் டத்தோ டாக்டர் லிங் லியோங் சிக் ஆகியோர் பிரதான மேடையில் காணப்படுகின்றனர்.

மலேசிய மண்ணில் பிறந்து தவழ்ந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, 21 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தனது பிறந்த மண்ணிற்கே கம்பீரமாகத் திரும்பி வந்தது. 1987 நவம்பர் 15 முதல் 19 வரை கோலாலம்பூரில் நடைபெற்ற ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, மலேசியத் தமிழ் வரலாற்றில் அழியாத முத்திரையைப் பதித்தது. அரசியல் சவால்கள், தமிழறிஞர்களின் ஆய்வுகள், கலைநிகழ்ச்சிகள், உலகத் தமிழர்களின் ஒன்றுகூடல் எனப் பல பரிமாணங்களைக் கொண்டிருந்த இந்த மாநாடு, மொழிப்பற்றின் வரலாற்றுச் சாட்சியாக அமைந்தது.

சவால்களை வென்ற சாதனை

ம.இ.கா. தேசியத் தலைவரும் மூத்த அமைச்சருமான மறைந்த துன் சாமிவேலு தலைமையில், பல்வேறு அரசியல் மற்றும் நிர்வாகச் சவால்களுக்கு மத்தியில் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் பிரம்மாண்டமாக முன்னெடுக்கப்பட்டன. மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் துணைத் தலைவராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் வி. டேவிட், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டபோதும், அவரது பெயரைச் சிறப்பு மலரிலிருந்து நீக்காமல் இடம்பெறச் செய்தது துன் சாமிவேலுவின் அரசியல் துணிச்சலையும் பெருந்தன்மையையும் வெளிப்படுத்தியது.

தமிழக அரசின் அதிகாரப்பூர்வ ஒத்துழைப்பைப் பெறுவதற்காகச் சென்னை சென்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அன்றைய அரசியல் சூழல் மாநாட்டுக்குப் பல தடைகளை ஏற்படுத்தியது.



இலக்கிய செலவர் குமரி அனந்தன் சக பேராளர்களுடன்.

தமிழக அரசின் புறக்கணிப்பும் கலைஞரின் வருகையும்

அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். தலைமையிலான அரசாங்கம் மாநாட்டில் அதிகாரப்பூர்வமாகப் பங்கேற்காத சூழலில், கலைஞர் மு. கருணாநிதி வருவாரா என்ற எதிர்பார்ப்பு மலேசியத் தமிழர்களிடையே பெரிதாக நிலவியது. தமிழக அரசின் நிலைப்பாட்டால் ப. சிதம்பரம், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உள்ளிட்ட சில முக்கியப் பிரமுகர்களும் மாநாட்டுக்கு வர முடியாமல் போனதாக அப்போது தெரிவிக்கப்பட்டது.

கலைஞரின் வருகைக்காகத் தமிழர்கள் காத்திருந்த தவிப்பைத் துன் சாமிவேலு தனது தொடக்க உரையில், "காத்திருந்தேன், காத்திருந்தேன் காலமெல்லாம் காத்திருந்தேன்; வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்தேன்" என்ற கவிதை வரிகள் மூலம் வெளிப்படுத்தினார்.

சனிக்கிழமை இரவு விமானப் பயணம் மேற்கொண்டு, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கோலாலம்பூர் வந்தடைந்த கலைஞர், ஓய்வெடுக்காமலேயே மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்துகொண்டார். "தமிழ் மாநாடு நடைபெறும் நேரத்தில் தமிழன் தூங்காமல் இருக்க வேண்டுமே என்றுதான் இப்படி நிகழ்ந்திருக்கிறது" என்று அவர் கூறியபோது, அவரது சொல்லாற்றல் அரங்கத்தினரை நெகிழச் செய்தது.

கலைஞரின் வருகையும் தமிழுரையும் மாநாட்டுக்கு முக்கியத்துவம் சேர்த்தன. தமிழகத்தின் அரசியல் பிரமுகரான ஆற்காடு வீராசாமியும் அவரது வருகையைப் பாராட்டினார்.



தமிழகத்தில் இருந்து சுபாங் அனைத்துலக விமான நிலையம் வந்து சேர்ந்த கலைஞர் கருணாநிதியை டத்தோ சாமிவேலு டத்தோ சுப்பிரமணியம் திரு. துரைமுருகன் ஆகியோர் அழைத்துவருகின்றனர். டத்தோ சாமிவேலுக்கு பின்புறம் திரு. நல்லா காணப்படுகிறார்.

மக்களின் அன்புத் தொல்லை

மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்துகொள்வதற்காகக் கலைஞர் கருணாநிதியைப் புத்ரா உலக வாணிப மையத்துக்கு அழைத்துச் சென்றபோது, அவரைக் காணவும் சந்திக்கவும் பொதுமக்கள் பெருமளவில் திரண்டனர். மக்கள் காட்டிய பேரன்பு, அவருடன் வந்திருந்த தலைவர்களுக்கும் பாதுகாப்புப் போலீசாருக்கும் பெரும் சவாலாக அமைந்தது.

துன் சாமிவேலு, டத்தோ சுப்ரா, டத்தோ கு. பத்மநாபன் ஆகியோர் பலமுறை முயன்றும், பாதுகாப்புப் போலீசார் கட்டுப்படுத்த முயன்றும் கூட்டத்தைக் கடந்து செல்வது எளிதாக இருக்கவில்லை. இதனால், கலைஞரை முன்வாயில் வழியாக அழைத்துச் செல்வதற்குப் பதிலாகப் பின்வாயில் வழியாக அழைத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு மொழித் தலைவரின் வருகைக்காக மக்கள் காட்டிய ஆர்வமும் அன்பும், அந்த மாநாட்டின் மறக்க முடியாத நினைவுகளில் ஒன்றாக அமைந்தது.

தொடக்க விழாவில் முக்கியப் பிரமுகர்கள்

புத்ரா உலக வாணிப மையத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் மலேசியப் பிரதமர் துன் டாக்டர் மகாதீர் முகமது மாநாட்டைத் திறந்து வைத்தார். பிரதான மேடையில் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுத் தலைவர் துன் சாமிவேலு, துணைத் தலைவர் டத்தோ சி. சுப்பிரமணியம், தினமணி அதிபர் அருள்மாமணி என்.டி.எஸ். ஆறுமுகம் பிள்ளை, இலங்கை அமைச்சர் ராஜதுரை, மருதபிள்ளை, கலைஞர் கருணாநிதி, போக்குவரத்து அமைச்சர் டத்தோ ஸ்ரீ லிங் லியோங் சிக் உள்ளிட்டோர் அமர்ந்திருந்தனர்.

மாநாட்டுக்குச் சிறப்பு வருகை புரிந்தவர்களில் கலைஞர் கருணாநிதி, இலங்கை அமைச்சர் ராஜதுரை, மதுரை ஆதீனம், நடிகை சௌகார் ஜானகி, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ரிதனி, ஆற்காடு வீராசாமி, துரை. முருகன் உள்ளிட்ட பலர் இடம்பெற்றனர்.

மாநாட்டின்போது துன் சாமிவேலு, கலைஞர் கருணாநிதிக்குக் கைக்கடிகாரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கி, அதை அவருடைய கையில் அணிவித்தார்.

அரசியல் வேறுபாடுகளைக் கடந்து, தமிழ் மொழியை முன்னிறுத்திய இந்தச் சந்திப்பு மாநாட்டின் முக்கிய நினைவுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

கலைஞரின் மலேசியப் பயணம் சுமார் 24 மணி நேரத்துக்குள் முடிவடைந்தது. மாநாட்டின் தொடக்க விழாவிலும் விருந்திலும் கலந்துகொண்ட அவர், மறுநாள் தாயகம் திரும்பினார். கோலாலம்பூர் வந்தடைந்தபோது சுபாங் விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது துன் சாமிவேலு, மாநாட்டுச் செயலாளர் டாக்டர் த. மாரிமுத்து, டத்தோ சுப்ரா,

டத்தோ கு. பத்மநாபன், டத்தோ நல்லா, வீ. செல்வராஜு ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழறிஞர்களின் ஆய்வுரைகள்

மாநாட்டின் சிறப்பு அரசியல் தலைவர்களின் வருகையுடன் முடிந்துவிடவில்லை. தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாடு ஆகிய துறைகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த அறிஞர்களும் ஆய்வாளர்களும் மாநாட்டுக்கு அறிவார்ந்த ஆழத்தை வழங்கினர்.



தமிழ்நாட்டைச் சேர்ந்த இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதன், டாக்டர் சி. குழந்தைசாமி உள்ளிட்டோர் தங்களது ஆய்வுகளாலும் கருத்துரைகளாலும் அரங்கத்தின் கவனத்தை ஈர்த்தனர்.

அகில இந்திய சாகித்திய அகாடெமி குழுத் தலைவரும் பிரபல நாவலாசிரியருமான நா. பார்த்தசாரதி, மாநாட்டு மேடையில் ஒரு வரலாற்று ஒப்பீட்டை முன்வைத்தார். 1966-இல் முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவில் நடைபெற்றபோது, தமிழக முதல்வராக இருந்த பக்தவத்சலம் எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாவலர் நெடுஞ்செழியனைத் தனது குழுவுடன் அழைத்து வந்த பெருந்தன்மையை அவர் சுட்டிக்காட்டினார். அத்தகைய அரசியல் பெருந்தன்மை அப்போதைய தமிழக முதல்வரிடம் இல்லாமல் போனது துரதிர்ஷ்டவசமானது என்று அவர் விமர்சித்தார்.

பிரதமர் மகாதீர் முகமது தனது தொடக்க உரையில் தமிழ்மொழியின் இனிமையைப் பாராட்டினார். ‘‘தமிழ்மொழியில் நிகழ்த்தப்படும் உரைகள் எனக்குப் புரியாவிட்டாலும், தமிழ்மொழி கேட்பதற்கு மிக இனிமையாக இருக்கிறது’’ என்ற அவரது கருத்து, மொழியின் இசைநயத்தை எடுத்துரைத்தது.

கலைஞர் கருணாநிதி, பழந்தமிழர்களின் கடற்பயணத் திறன், உழவுத் தொழில், கல் தச்சுக் கலை நுணுக்கங்கள் ஆகியவற்றைத் தனது உரையில் விவரித்தார். புறநானூற்றில் இடம்பெறும் வீரத்தாயின் பெருமையை எடுத்துரைத்து, ‘‘அந்தப் புறநானூற்று வீரத்தாய் இப்போது ஈழத்தில் வாழ்கிறாள்’’ என்று உணர்ச்சிப்பூர்வமாகக் குறிப்பிட்டார்.

டாக்டர் சி. குழந்தைசாமி, ‘‘தமிழினம் வளர்ந்தால்தான் தமிழ்மொழி வளரும். தமிழினம் வளராது தமிழ்மொழி வளர முடியாது’’ என்ற ஆழமான கருத்தை முன்வைத்தார். சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் மாநாட்டில் பங்கேற்க வந்திருப்பதாகக் குறிப்பிட்ட இலங்கை அமைச்சர் ராஜதுரை, மாநாட்டின் முடிவுகள் இலங்கையில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

தமிழர் வரலாற்றைப் பறைசாற்றிய கண்காட்சி

மாநாட்டையொட்டி கோலாலம்பூர் தொல்பொருள் காட்சிக்கூடத்தில் சிறப்புக் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டது. அப்போதைய சுற்றுலாத்துறை அமைச்சர் சபாருடின் சிக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

கண்காட்சிக் கூடத்தில் இராஜேந்திர சோழனின் சிலை கம்பீரமாக வைக்கப்பட்டிருந்தது. கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் தேவஸ்தானத்துக்குச் சொந்தமான பெரிய தேர் ஒன்றும் அங்கு இடம்பெற்றது.

‘‘தென்கிழக்காசியாவில், குறிப்பாக மலேசியாவில், தமிழர்களின் வரலாறும் பங்களிப்பும்’’ என்பதே கண்காட்சியின் கருப்பொருள். மூன்று மாதங்கள் நடைபெற்ற இந்தக் கண்காட்சி, தமிழர்களின் வரலாற்றையும் பண்பாட்டுச் செழுமையையும் பொதுமக்களிடம் கொண்டு சென்றது. தமிழர்களின் தொன்மை, கலை, பண்பாடு ஆகியவற்றை ஒரே இடத்தில் காட்சிப்படுத்திய இந்த முயற்சி, மலேசியாவில் தமிழர்களின் நீண்டகாலப் பங்களிப்பை நினைவூட்டும் வாய்ப்பாக அமைந்தது.

கணினித் தமிழும் எழுத்துச் சீர்திருத்தமும்

வெறும் இலக்கியப் பெருமைகளைப் பேசும் மேடையாக மட்டுமின்றி, தமிழின் எதிர்காலத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான தொடக்கப் புள்ளியாகவும் மாநாடு அமைந்தது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சுமார் 230 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. மொழியியல், சித்த மருத்துவம் உள்ளிட்ட துறைகளுடன் கணினித் தமிழ் தொடர்பான ஆய்வுகளும் இடம்பெற்றன.

பெங்களூரின் ‘பாரதி சொற்பொறி’ தொடர்பான செயல்விளக்கத்துடன், மலேசியக் கணினி நிறுவனப் பொறியியலாளர் முத்தெழிலனின் தமிழ் அச்சுமுறை மற்றும் அறிக்கை தயாரிக்கும் மென்பொருள் தொடர்பான செயல்விளக்கங்களும் இடம்பெற்றன.

தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்துச் சீர்திருத்தத்தை மலேசியாவிலும் நடைமுறைப்படுத்துவது குறித்த விவாதங்களும் நடைபெற்றன. அரசாணை வழியாக மொழியியல் மாற்றங்களைத் திணிப்பதற்குப் பதிலாக, அவற்றின் வரலாற்றுப் பின்னணியையும் மக்களின் பயன்பாட்டையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற வாதங்கள் முன்வைக்கப்பட்டன. வீரமாமுனிவர் மற்றும் பெரியாரின் எழுத்து வடிவங்கள் மக்களிடையே படிப்படியாக எவ்வாறு வேரூன்றின என்பதும் விவாதிக்கப்பட்டது.

மலாய், ஆங்கில மொழிகளின் ஆதிக்கத்துக்கு மத்தியில், வீட்டிலும் அன்றாட வாழ்விலும் தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வை வளர்ப்பதற்கும் மாநாடு ஊக்கமளித்தது. ‘‘வீட்டில் தமிழ் பேசுவோம்’’ என்ற இயக்கம், தமிழ்மொழி மற்றும் தமிழ்ப்பள்ளிகளின் எதிர்காலம் குறித்த விழிப்புணர்வை வலுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டது.

ஆய்வரங்குகளும் கலைநிகழ்ச்சிகளும்

மாநாட்டின் ஆய்வரங்குகள் மலாயா பல்கலைக்கழகத்தின் வேந்தர் துங்கு மண்டபத்தில் நடைபெற்றன. மொழி, இலக்கியம், வரலாறு, மருத்துவம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஆய்வாளர்கள் தங்களது கருத்துகளையும் ஆய்வு முடிவுகளையும் பகிர்ந்துகொண்டனர்.

நவம்பர் 16 முதல் 19 வரை தினமும் இரவு நடைபெற்ற கலாச்சாரக் கலைநிகழ்ச்சிகளும் மாநாட்டின் சிறப்பை உயர்த்தின. துன் சாமிவேலுவின் துணைவியார் டத்தின் ஸ்ரீ இந்திராணி சாமிவேலு குத்துவிளக்கேற்றிக் கலைநிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்.

நாட்டிய நாடகங்கள், பரதநாட்டியம், சித்தார், வீணை, குழல் இசை உள்ளிட்ட நிகழ்ச்சிகள் மூலம் மலேசியக் கலைஞர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த தமிழறிஞர்கள் மலேசியக் கலைஞர்களின் ஆற்றலைக் கண்டு வியந்தனர். ‘‘தமிழகத் திறமைகளுக்கு மலேசியக் கலைஞர்கள் எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்ல’’ என்று டத்தின் ஸ்ரீ இந்திராணி சாமிவேலு பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.



கலைஞர் கருணாநிதியின் கையில் டத்தோ சாமிவேலு அன்பளிப்புச் செய்த கடிகாரத்தை அணிவித்து விடுகிறார். படத்தின் இடப்பக்கத்தில் டத்தோ சி.சுப்பிரமணியமும் வலப்பக்கத்தில் டாக்டர் டி. மாரிமுத்துவும்

வரலாற்றில் நிலைத்த ஆரணங்கு

அரசியல் சவால்களையும் நிர்வாகத் தடைகளையும் கடந்து நடைபெற்ற ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, மலேசியத் தமிழர்களின் மொழிப்பற்றையும் பண்பாட்டு அடையாளத்தையும் உலக அரங்கில் வெளிப்படுத்திய முக்கிய நிகழ்வாக அமைந்தது.

அரசியல் தலைவர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரையும் ஒரே மேடையில் இணைத்த இந்த மாநாடு, தமிழ்மொழியின் கடந்தகாலப் பெருமைகளை நினைவுகூர்ந்ததோடு அதன் எதிர்கால வளர்ச்சி குறித்தும் சிந்திக்க வைத்தது.

உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்களது தாய்மொழியையும் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற



செய்தியையும் இந்த மாநாடு உணர்த்தியது.

மலேசிய மண்ணில் பிறந்து, 21 ஆண்டுகளுக்குப் பிறகு அதே மண்ணுக்குத் திரும்பி வந்த ஆரணங்கு, ஒரு மாநாடாக மட்டுமல்லாமல், உலகத் தமிழர்களின் வரலாற்று நினைவாகவும் மொழிப்பற்றின் அடையாளமாகவும் நிலைத்து நிற்கிறது.



Published by: Eye Mag Publication Sdn Bhd (1397097-V) No 73-2, Jalan Prima SG 3, Prima Sri Gombak, 68100 Batu Caves, Selangor, Tel: 03-61811414
Email: Admin@thisaigalnews.com Printed by Twinstar Synergy Sdn Bhd (987235X) Lot 2A, Jalan 13/2A, 46200 Petaling Jaya, Selangor.